# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே


வெள்ளிக்கிழமை 19.11.2021 supeedsam.com supeedsam@gmail.com







# தடைகளையும் மீறி யாழ்.பல்கலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது



தமிழர்களின் பாரம்பரிய விழாக்களில் ஒன்றான கார்த்திகை விளக்கீடான நேற்று (18) பல்வேறு தடைகளையும் தாண்டி யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் தீபம் ஏற்றி கொண்டாடப்பட்டது.

நேற்று மாலை 6 மணியளவில் பல்கலைக்கழகத்திற்கு கார்த்திகை விளக்கீட்டினை கொண்டாடுவதற்கு சென்ற மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் பல்கலைக்கழகத்தில் ஆன்மீக ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் தடை விதிப்பதா என மாணவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு பல்கலைக்கழகத்திற்குள் சென்று கார்த்திகை விளக்கீட்டு தீபங்களை ஏற்றியுள்ளனர்.

கடந்த வருடம் கார்த்திகை தீபம் ஏற்றியதற்காக யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தபகவானின் போதனைக்கு கலங்கத்தை ஏற்படுத்தும் சுமனரத்தின தேரர்

(சுமன்)

புத்தபகவானின் போதனைக்கு கலங்கத்தை கற்பிக்கும் விதத்திலேயே மட்டக்களப்பு மங்களராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரரின் செயற்பாடுகள் அமைந்துள்ளதென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சி ஊடகச் செயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கை இலங்கை தமிழரசு கட்சித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.



கடந்த 15ம் திகதி மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரர் அவர்கள் பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் குழப்பம் விளைவித்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்கு கடந்த 15ம் திகதி மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி சென்று பிரதேச

02 ஆம் பக்கத்தில்...

# என்னுடைய பதவிக் காலத்தில் ஊழல் மோசடிகளுக்கு இடமிருக்காது

## தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸ்



(நூருல் ஹுதா உமர்)

நான் உபவேந்தராக பதவிவகிக்கும் இந்த காலகட்டங்களில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஊழல் மோசடிகள், லஞ்சம் என்ற கதைக்கே இடமிருக்காது. இறைவன் மீது ஆணையிட்டு என்னால் இதை உறுதிபடக்கூற முடியும். கடந்த காலங்களை பற்றி சிந்திப்பதை விட எதிர்காலங்களை பற்றி சிந்திப்பதே பொருத்தமானது. கடுமையாக முயற்சிகள் செய்தால் எதையும் சாதிக்க முடியும். ஏழ்மையில் பிறந்த நான் இவ்வளவு தூரம் உயரக்காரணம் விடாமுயற்சியும், அர்ப்பணிப்புமே தவிர வேறில்லை. கல்விக்கு ஏழ்மை தடையல்ல. முயற்சித்தால் எந்த உயரத்தையும் தொடலாம் என இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர்

02 ஆம் பக்கத்தில்...

# பாதுகாப்பிற்கு பாரிய நிதி ஒதுக்கீடுகள் எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்காகவா?

## த.கலையரசன் எம்.பி கோள்வி

(சுமன்)

கல்வி சுகாதாரத்தை விட பாதுகாப்பிற்கு இவ்வளவு பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற விடயம் எங்கள் மத்தியில் பலவித அச்சத்தை ஏற்படுத்துகின்றது. தொல்பொருள் வனபரிபாலனம் என இராணுவத்தின் பின்னணியில் பல செற்பாடுகள் இடம்பெறுகின்ற. இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்குக் கையாளப்படுமோ என்ற அச்சம்

02 ஆம் பக்கத்தில்...



# இரண்டரை வருடங்களுக்கு வீழ்த்த முடியாது

இந்த அரசாங்கத்தை அடுத்த இரண்டரை வருடங்களுக்கு வீழ்த்த முடியாது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,



02 ஆம் பக்கத்தில்...

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் - டெலோ சந்திப்பு



(வாஸ் கூஞ்ஞ)

இலங்கைக்காக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஸாரா ஹல்ட்டன் அம்மையார் உடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

கொழும்பில் அமைந்துள்ள உயர்ஸ்தானிகரின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலத்தில் குறித்த சந்திப்பு

02 ஆம் பக்கத்தில்...






# மட்டக்களப்பு முன்னாள் மாநகர சபை மேயருக்கு அபராதம் விதிப்பு

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பில் பாலியல் விடுதி நடாத்திய குற்றச்சாட்டுத் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வரான சிவகீர்த்தாவை 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






# மட்டக்களப்பு நகரில் மனித பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் விற்பனை

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் மனித பாவனைக்குதவாத உணவுப்பொருட்களை விற்பனை செய்த 4 வர்த்தக நிலையங்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்துள்ளார்.

குறித்த வர்த்தக நிலையங்களில் இருந்து சுமார் 100 கிலோ மனித

02 ஆம் பக்கத்தில்...




# பாதுகாப்பிற்கு பாரிய நிதி ஒதுக்கீடுகள் எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்காகவா?

உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவிதுள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2022ம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு செலவிற்காகவே பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்டிலே கொவிட் தொற்று, பொருளாதார வீழ்ச்சி, மக்கள் மத்தியிலே பாரிய சுமை சுமத்திப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் இவ்வாறு பாதுகாப்பிற்காக நிதி ஒதுக்கீடு செய்வது எந்தவகையில் நியாயம்? குறிப்பாக இந்த நாட்டிலே யுத்தம் நடைபெறுகின்ற போது ஒதுக்கப்படுகின்ற நிதியே தற்போதும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இது ஏற்புடைய விடயம் அல்ல.

இந்த நாட்டிலே ஒரு பிரஜைக்கு கல்விக்காக 5253ரூபா 44 சதமும், சுகாதாரத்திற்காக %042 ரூபா 61 சதமும் ஒக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை பாதுகாப்பிற்காக ஒரு தனி மனிதனுக்கு 22000 ரூபா வரையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நாட்டிலே யுத்தம் நடைபெற்றிருக்கின்றது. அதன் மூலம் பல பாதிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது பாதுகாப்பிற்கு இவ்வளவு பாரிய நிதியை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற விடயம் எங்கள் மத்தியில் பலவித அச்சத்தை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் யுத்தம் முடிந்த கையோடு எமது பிரதேசங்களில் பல விடயங்களை முன்னெடுக்கின்றீர்கள். குறிப்பாக தொல்பொருள், வனபரிபாலனம் என்ற அடிப்படையில் இராணுவத்தினர் பின்னணியில் பல செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்குக் கையாளப்படுமோ என்ற அச்சம் உள்ளது.

இந்த நாட்டிலே வரிச்சுமையின் காரணமாக ஒவ்வொரு குடிமகனும் கடனாளியாகியுள்ள நிலையில் பாதுகாப்பிற்கு இத்தனை தொகையை ஒதுக்கீடு செய்வதை விட ஒரு குறிப்பிட்ட தொகையாவது இந்த நாட்டிலே கணவனை இழந்து வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாமல் தத்தளிக்கின்ற அந்த உறவுகளுக்கு ஒதுக்கீடு செய்திருந்தால் உண்மையிலேயே நாங்கள் பாராட்டியிருக்கலாம்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் அமைய அடிப்படையில் 920க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிகின்றார்கள். அவர்களுக்குரிய நிரந்த நியமனம் வழங்கப்படாதிருக்கின்றது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பழிவாங்குகின்ற செயற்பாடுகளையே செய்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு பணிபுரிகின்ற அந்த ஊழியாகள் மீதும் பழிவாங்கல்களைச் சுமத்தாமல் உள்ளூராட்சி சபைகளிலும் சிறந்த நிருவாகக் கட்டமைப்பினை உருவாக்க வேண்டும என்றால் உள்ளூராட்சி சபைகளில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும். அதனூடாவே அந்தப் பிரதேசத்தின் சுற்றம் சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்த முடியும். குறிப்பாக தற்போதைய கொவிட் நிலைமைகளிலும் இந்த ஊழியர்களின் பங்களிப்பு அளப்பரியது. எனவே எதிர்காலத்தில் நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டத்திலே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த பன்னிரண்டு வருடங்களாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான நீதி இந்த நாட்டில் இற்றவரைக்கும் கிடைக்கப்படவில்லை. தறபோது மரண சான்றிதழ் சமர்ப்பித்தால் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற அடிப்படையிலே வழங்கப்பட்டுக் கொண்டிக்கின்றது.

இந்தப் பணத்திற்காக எமது உறவுகள் பேராடவில்லை. அவர்கள் இந்த நாட்டிலே ஒரு நியாயமான தீர்வு கிடைக்கப்பட வேண்டும், அவர்களுக்கு ஏற்பட்டு; இழப்பு இன்னுமொரு சந்ததிக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பனவற்றிற்காகவே போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஐநா வினூடாக பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆனால் ஐநாவின் தீர்மானங்களை ஏற்று எந்தப் பணிகளையும் செய்யக் கூடிய ஒரு சூழலில் இந்த அரசாங்கம் இல்லை. ஐநா சொல்வது ஒன்று இந்த அரசு செய்வது ஒன்று. இந்த நாட்டில் உள்நாட்டுப் பொறிமுறையூடாக தீர்வுகளை வழங்க முடியும் என்று சொல்லுகின்ற இந்த அரசாங்கம் பன்னிரண்டு வருடங்களாக உள்ளகப் பொறிமுறையின் ஊடாக ஏதாவது தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறதா அல்லது போராட்டங்களுக்கு ஒரு தீர்வாவது கிடைத்திருக்கின்றாதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். அந்த அடிப்படையில் அனைத்துலக சர்வதே சாசனத்தின்படி பாதிக்கபட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட எவ்வித தீர்வுகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

1980ல் இருந்து 2009 வரையான காலப் பகுதியில் சுமார் ஒரு இலட்சம் பேர் வரை காணமலாக்கப்பட்டிருக்கின்றாடர்கள். 2009ம் ஆண்டு இறுதி யுத்தத்திலே 146%00 பேர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். எமது உறவுகளின் போராட்டமென்பது இந்த நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும். சர்வதேசம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு எமக்குக் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் இடம்பெற்றது. 70 வருடமாக எமது இனம் சந்தித்த இழப்புகளும் பாதிப்புகளும் எந்த அரசாங்கத்தினாலும் ஈடு செய்யப்பட முடியாதவையாகும்.

காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் மரணச் சான்றிதழ் வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதன் பின்னணி என்ன? இந்த நாட்டில் காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் மரணித்து விட்டார்களா என்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறாயின், நியாய பூர்வமான தீர்வு இந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். நாங்களும் இந்த நாட்டின் பிரஜைகளாக ஏனைய சமூகத்தைப் போன்று சம உரிமையுடன் வாழ வேண்டும் என்று நினைக்கின்றோம்.

எமது சமூகம் சலுகைகளுக்குச் சோரம் போன சமூகம் அல்ல. தமது உரிமைக்காக போராடுகின்ற இனம். ஒரு நிலையான சமாதானம் சமத்துவம் இந்த நாட்டிலே நிலைநிறுத்தப்பட வேண்டும். தங்களுடைய எதிர்கால சந்ததியினர் கடந்த 2009ம் ஆண்டு ஏற்பட்ட அழிவைப் போன்றதொரு அழிவைச் சந்திக்கக் கூடாது என்ற அடிப்படையிலேயே எமது உறவுகள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சுதந்திரத்தின பின் எமது சமூகம் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள். குறிப்பாக கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் ஆரம்ப காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் 81 வீதமான தமிழர்கள் இருந்திருக்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தில் 74.5 வீதமான தமிழர்கள் இருந்திருக்கின்றார்கள். ஆனால் இந்த நாட்டிலே ஆட்சிக்கு வந்த பெரும்பான்மைத் தலைவர்கள் திட்டமிட்ட குடியேற்றங்களை ஆரம்பித்து இனப்பரம்பலை மாற்றினார்கள். கந்தளாய், விவசாயக் குடியேற்றம், அல்லை குடியேற்றம், மொரவை, மகா திபுல, பதவியா திட்டம் என்றும் பல குடியேற்றங்களை ஆரம்பித்து அந்தப் பிரசேங்களில் தமிழர்களின் செறிவைக் குறைத்து அடுத்த கட்டமாக கிழக்கு மாகாணம் பூராகத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இன்று அம்பாறை மாவட்டத்திலும் எங்களது இனத்தின் செறிவு குறைக்கப்பட்டிருக்கின்றது. தற்போது கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் செறிவு வெறுமனே 39 வீதமாக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டிலே மாறி மாறி வந்த அரசங்கம் எதுவும் தமிழர்களைப் பாதுகாக்கும் வகையிலும், இந்த நாட்டில் சமாதானம் எற்படும் விதத்திலும் கையாளவில்லை. இன்று ஒவ்வொரு சமூகமும் மாவட்ட ரீதியில் இனரீதியான பரம்பலை அதிகரிக்க வேண்டும். அந்த மாவட்டங்களை ஆள வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த கொடிய யுத்தம காரணமாக எமது மக்கள் இன்று அகதிகளாக இந்தியாவில் இருக்கின்றார்கள். ஆனால் ஒரே நாடு ஒரே சட்டம், ஐக்கிய இலங்கை என்று மார்தட்டிக் கூறுகின்ற இந்த நாட்டின் தலைவர்கள் இந்த நாட்டில் இருந்து அகதிகளாகச் சென்ற மக்களை மீள இந்த நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எந்த அடிப்படை வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. எமது மக்கள் அங்கு மிக மோசமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு அந்த மக்கள் வரவேண்டும் என்று குறிப்பிட்டாலும் நிதி செலுத்த வேண்டும், இங்கு வருகின்ற போது அவர்களுக்கு பாதுகாப்பு, அடிப்படை வசதி என்பவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்த அரசாங்கம் தயார் இல்லை. அது தான் மனவேதனையான விடயம் என்று தெரிவித்தார்.

## பிரித்தானிய உயர்ஸ்தானிகர் - டெலோ சந்திப்பு

நேற்று காலை எட்டரை மணிக்கு இடம் பெற்றுள்ளது .

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் மற்றும் சட்டத்தரணி தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் ஐ.நா பிரேரணை சம்பந்தமாகவும் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டன.

பிரித்தானியாவின் தலைமையிலே ஐநா மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட 46/1 பிரேரணையின் முக்கியத்துவம் அதில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள், அவற்றில் காணப்படுகின்ற முன்னேற்றங்கள், அதன் அடிப்படையில் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் என்பனவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. கால வரையறையோடு கொண்டுவரப்பட்ட இந்த பிரேரணையில் பிரேரிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்ற 18 மாதங்களே உள்ளன.

அதில் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் ஒருபுறம் இருக்கத் தமிழ் தரப்பினரால் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களிலும் அக்கறை செலுத்துவது பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இதன் பிரகாரம் தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்க முக்கிய பிரச்சினையான காணி அபகரிப்பு இன குடிப்பரம்பல் சிதைப்பு என்பவற்றைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐநா பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நிறைவேற்றுவது, மாகாணசபை தேர்தல்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

## மட்டக்களப்பு முன்னாள் மாநகர சபை மேயருக்கு

மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு முன்னால் அமைந்திருந்து முன்னாள் மாநகரசபை மேயரான சிவகீர்த்தாவின் வீட்டுடன் நடாத்தி வந்த தங்கு விடுதியில் இயங்கிவந்த விடுதியைக் கடந்த 20161024 ம் திகதி பொலிஸார் முற்றுகையிட்டனர்.

அத்துடன் அங்கு இருந்தவர்கள் உட்பட விடுதியை நடாத்தி வந்த முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வரான சிவகீர்த்தாவையும் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவருக்கு எதிராக பொலிஸார் வழக்கு தொடர்ந்து நீதிமன்றில் முன்னிறுத்திய நிலையில் அவருக்கு எதிராக மட்டக்களப்பில் சட்டத்தரணிகள் ஆஜராகாத நிலையில் 3 மாத காலத்தின் பின்னர் அவர் நீதிமன்ற பிணையில் வெளிவந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த 4 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில், நேற்றையதினம் குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னாள் மாநகரசபை மேயரை 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்துள்ளார்.

## புத்தபகவானின் போதனைக்கு கலங்கத்தை ஏற்படுத்தும் சுமனரத்தின தேரர்

செயலாளர் திருமதி தி.தட்சனகௌரியின் அலுவலக அறையில் புகுந்து அநாகரிகமான முறையில் சிங்கள தூசண வார்த்தைகளால் பிரதேச செயலாளரை ஏசியதோடு காரியாலய அறையில் நிலத்தில் கால்நீட்டி இருந்து கடமைக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

புத்த பகவானின் போதனைக்கு கலங்கத்தை கற்பிக்கும் விதத்திலேயே மட்டக்களப்பு மங்களராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரரின் செயற்பாடுகள் அமைந்துள்ளது. அவரின் வன்முறைகள் கடந்த பல வருடங்களாகவே தொடர்கிறது. பௌத்த தலைமைப்பீடமோ அரசாங்கங்களோ அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. அவரின் காட்டுமிராண்டித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குறித்த இப்பிக்கு கடந்த காலங்களில் அதே பிரதேச செயலகத்தில் பலமுறை பல அடாவடிகளை மேற்கொண்டதைக் கருத்திற் கொண்டு இந்நிலைமையை அவதானித்த பிரதேச செயலக ஏனைய அதிகாரிகளும் உத்தியோகஸ்த்தர்களும் பிரதேச செலயாளரின் அறைக்கு உடன் விரைந்துள்ளனர்.

இந்நிலையில் பிற்பகல் ஒரு மணியாகும் வரையிலும் பிக்கு பிரதேச செயலாளரின் அறையிலிருந்து எழும்பவே இல்லை. இதனால் பிரதேச செயலக உத்தியோகஸ்த்தர்களும் தமது அரச கடமையைச் செய்யமுடியாமல் போயிருந்தன. மிக நீண்ட நேரமாகியும் தமது கடமைக்கு இடையூறு விளைவித்துக் கொண்டிருந்த பிக்குவை வெளியேற்ற வேறு வழியின்றி பிரதேச செயலக உத்தியோகஸ்த்தர்கள் உடன் வீதிக்கு வந்து பிரதேச செயலக முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை பொலிசார் அங்கு வருகை தந்தபோதும் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அவருக்கு பாதுகாப்பு வழங்குவதுபோல் நடந்து கொண்டனர் என அந்த அலுவலகத்தில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் என்னிடம் தெரிவித்தனர். இவரின் அடாவடித்தனங்கள் பல தடவைகள் அரங்கேறியுள்ளது இதுவரை எந்த சட்ட நடவடிக்கையும் இவருக்கு எதிராக எடுக்கப்படவில்லை.

கடந்த 11/11/2016, பட்டிப்பளை பிரதேச செயலாளர் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர்கள் கெவிளியாமடுவில் கள பயணம் செய்தபோது அப்போது இருந்த பிரதேச செயலாளர் திருமதி வில்வரெத்தினம் மற்றும் கிராமசேவை அதிகாரிக்கும் மிகவும் கீழ்த்தரமான வார்தைகளால் தமிழர்கள் புலிகள் எனவும், பறத்தமிழன் எனவும் தூசண வார்த்தைகளால் திட்டித்தீர்த்தார்.

அந்த இடத்தில் கடமையில் நின்ற பொலிசார் வேடிக்கை பார்த்து நின்றனர். சம்பந்தப்பட்ட புத்தபிக்கு அத்துமீறி காணி அபகரிப்பு செய்வதை தடுக்கும் விதத்தில் நேரடியாக பார்வையிடச் சென்ற சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரும் காரியாலய உத்தியோகத்தர்களும் அங்கு சென்ற போது மிகவும் கீழ்த்தரமான முறையில் சம்பந்தப்பட்ட புத்தபிக்கு தமிழ் இனத்தை இம்சித்துள்ளார். கடந்த 2014ல் பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் அத்துமீறி பிரவேசித்து பிரதேச செயலாளரைத் தாக்க முயன்றார். இதுதொடர்பாக நீதி மன்றத்தில் வழக்கும் பதிவுசெய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காக்கி உடைதரிக்காத இராணுவ அதிகாரி போன்று இவர் காவி

உடைதரித்து தமிழ்மக்கள் மீது காடைத்தனங்களைக் கட்டவிழ்த்துள்ளார்.

இவ்வாறான இனவாத புத்தமதகுருவின் செயற்பாடுகளை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

நல்லாட்சி அரசும் இவரின் காட்டுமிராண்டி செயற்பாடுகளைக் கணக்கில் எடுக்கவில்லை, தற்போதய அரசும் இவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவில்லை.

ஒருநாடு ஒருசடம் என கூறி அதற்கான செயலணிக்கும் ஒரு பௌத்த பிக்கு ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். அந்த ஒருநாடு ஒருசட்டம் இலங்கையில் பௌத்த மதகுரு மாருக்கு இல்லையா எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு நகரில் மனித

பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இத்தேடுதல் நடவடிக்கையில் நேற்று காலை முதல் ஈடுபட்டுள்ளனர்.மட்டக்களப்பு பொதுச்சந்தை உட்பட நகரிலுள்ள பேக்கரிகள், சில்லறை கடைகள், ஹோட்டல்கள், மரக்கறி கடைகள் உட்பட 16 கடைகளில் தேடுதல் நடாத்தியபோது 4வர்த்தகர்கள் மாட்டியதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

## என்னுடைய பதவிக் காலத்தில் ஊழல் மோசடிகளுக்கு இடமிருக்காது

பேராசிரியர் (கலாநிதி) றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 05 வது உபவேந்தராக இளவயதில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் சமூகவியல் துறையின் முதன்நிலை பழைய மாணவரும், சாய்ந்தமருதில் இருந்து முதற்தடவையாக உபவேந்தர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவருமான பேராசிரியர். கலாநிதி றமீஸ் அபூபக்கர் அவர்களை சொந்த ஊர் மக்கள் கூடி வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு வியாழக்கிழமை சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி மைமூனா அஹமட் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இனவாதம், பிரதேசவாதம் இல்லாத ஒருவனாக நான் எப்போதும் இருந்துள்ளேன். முரண்பாடுகள் இல்லாத பல்கலைக்கழக சூழலை உருவாக்கி மேலும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தையும், இந்த நாட்டையும், எமது சமூகத்தையும் வளர்ச்சி பாதைக்கு கொண்டுசெல்வேன். அதற்கு சகலருடைய ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

செராண்டிப் இளைஞர் பவுண்டேஷனின் நெறிப்படுத்தலில் ஈஸ்டர்ன் காஸ்ட் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட், சம்மாந்துறை நபீர் பவுண்டேஷன் மற்றும் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபம் ஆகியவற்றின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது ஜும்மாப்பள்ளிவாசல், சாய்ந்தமருது உலமா சபை, சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்கம், அல் மீஸான் பௌண்டசன், ஸ்ரீலங்கா, பிராந்திய பாடசாலைகள், மருதம் கலைக்கூடல், சாய்ந்தமருது பிரதேச செயலகம் உட்பட முக்கிய சமூக நிறுவனங்கள், வர்த்தகர்கள், சமூக ஆர்வலர்கள், கல்விமான்கள் என பலரும் கலந்துகொண்டு பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரை பொன்னாடை போத்தி நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்மாப்பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபத்துள் கரீம், செயலாளர் அப்துல் மஜீத் ரோஷன் மரிக்கார் உட்பட பள்ளிவாசல் நிர்வாகிகள், சாய்ந்தமருது மாளிகைக்காடு உலமா சபை தலைவர் மௌலவி ஏ.எல்.எம். சலீம் (சர்கி) உட்பட உலமாக்கள், மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதம வாகன பரிசோதகர் பொறியியலாளர் ஏ.எல்.எம். பாரூக், ஈ.சி.எம். நிறுவன பணிப்பாளர் திருமதி நாபீர் சகுணாஸ், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சார பீடாதிபதி, பல்கலைக்கழக பதிவாளர் அப்துல் சத்தார், முதுநிலை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், துறை தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எம்.ஐ.எம். சம்சுதீன், பிராந்திய பாடசாலை அதிபர்கள், கலை, இலக்கியவாதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




# அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகளை செய்யவிடாமல் கல்முனை முதல்வர் இழுத்தடிக்கிறார்

(மாளிகைக்காடு நிருபர்)

ஆளும் அரசாங்கத்தின் முக்கியஸ்தராக இருக்கும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டவலியு. டீ. வீரசிங்கவினால் கல்முனை மாநகர வீதிகளை அபிவிருத்தி செய்ய எனது வேண்டுகோளின் பிரகாரம் 1.9 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வேலைகளை செய்வதற்கு கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். றக்கீப் தடையாக இருப்பதுடன் மாநகரசபையினால் வழங்கவேண்டிய அனுமதிகளையும் மறுத்துவருகிறார். அதனை போன்று மருதமுனை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு உள் நோயாளர் விடுதியமைக்க 82 லட்சமும் மாகாண சுகாதார அமைச்சினால் ஒதுக்கப்பட்டது. கொந்தராத்து காரருக்கு அந்த



வேலைக்கான ஒப்படைப்புக்கள் செய்யப்பட்டும் இன்றுவரை அந்த வேலைகளை ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளது. என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தர் இஸட். ஏ. நௌஸாட் தெரிவித்தார்.

புதன்கிழமை (17) மாலை கல்முனை தனியார் விடுதியில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கடந்த காலங்களில் கல்முனை மாநகர முதல்வரின் அதிகார துஸ்பிரயோகங்கள், பொதுச்சொத்துக்களை கையாண்ட அவரது புதல்வரின் போக்குகள், மாநகரில் இடம்பெறும் மோசடிகளை வெளியில் கொண்டுவந்தவன் என்ற ரீதியிலும், மக்களுக்கு கஷ்டத்தை கொண்டுவரும் நோக்கில் அநீதியாக விதிக்கப்பட்ட குப்பைவரிக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்தவன் என்ற அடிப்படையிலும் என்னை பழிவாங்குவதாக எண்ணி ஊரின் அபிவிருத்தியை தடுக்கிறார்.

இது ஒன்றும் அவருக்கு புதிதல்ல. கடந்த காலங்களிலும் ஏனையவர்களினால் கொண்டுவந்த ஊருக்கான அபிவிருத்திகளை தடுத்துக்கொண்டிருந்தவர் அவர். மக்களுக்காகவே மாநகர சபை. மாநகரசபைக்காக மக்களில்லை என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும். இது விடயம் தொடர்பில் உரியவர்கள் கவனத்தில் எடுத்து மக்களுக்கு நன்மை பயக்கும் இந்த அபிவிருத்திகளை செய்ய நடவடிக்கை எடுத்துதரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க ஊடகங்களின் உதவியை நாடியுள்ளேன் என்றார்.

இவ்விடயம் தொடர்பில் கல்முனை பிரதேசசெயலாளரை தொடர்புகொண்டு வினவியபோது பிரதேச செயலகத்தின் பக்க வேலைகளை முன்கொண்டு செல்வதாகவும் இன்னும் கல்முனை மாநகரசபையின் அனுமதிகள் கிடைக்கவில்லை என்றும் எதிர்காலத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

# கழிவு நீர் முகாமைத்துவ அமைப்புகள் நாட்டின் அனைத்து பிரதான நகரங்களுக்கும்

(வாஸ் கூஞ்ஞ)





சில பிரதேசங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட கழிவு நீர் முகாமைத்துவ அமைப்புகள் எதிர்காலத்தில் நாட்டின் அனைத்து பிரதான நகரங்களிலும் நிர்மாணிக்கப்படும் என கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்தார்.

கண்டி நகர்ப்புற கழிவு நீர் முகாமைத்துவத் திட்டத்தை அலரிமாளிகையில் இருந்து இணையவழி ஊடாக ஆரம்பித்துவைத்து மக்கள் பாவனைக்காக கையளிக்கும் போதே கௌரவ பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் வகையில் ' சுகாதாரம் தொடர்பான தேசிய திட்டமொன்றை ' உருவாக்க முடிந்திருப்பது மிகப்பெரிய சாதனை என கௌரவ பிரதமர் கூறினார்.

நிலத்தடி நீரைப் பாதுகாத்து நீர் வளப் பகுதிகளைப் பாதுகாத்துஇ நீரின் தரத்தை பராமரிப்பதற்கு 2030 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்படும் ' சுகாதாரம் தொடர்பான தேசிய திட்டம் ' நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்களினால் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

கண்டி கன்னொறுவ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் நடைபெற்ற வைபவத்தின் போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் கண்டி நகர கழிவு முகாமைத்துவ திட்டத்தின் வாகனங்கள்இ இயந்திரங்கள் மற்றும் பாகங்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை மற்றும் கண்டி மாநகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

கண்டி மேயர் கேசர சேனாநாயக்க மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் திலின எஸ். திரு.விஜேதுங்கஇ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். கண்டி நகர்ப்புற கழிவு நீர் முகாமைத்துவ திட்டம் குறித்த ஆவணப்படமும் திறப்பு விழாவுடன் இணைந்து ஒளிபரப்பப்பட்டது.

குறித்த நிகழ்வில் கௌரவ பிரதமர் ஆற்றிய முழுமையான உரை;

தெற்காசிய பிராந்தியத்தை எடுத்துக் கொண்டால் சுகாதார வசதிகள் மற்றும் பயன்பாட்டில் நாங்கள் இன்னும் முன்னணியில் இருக்கிறோம். எவ்வாறாயினும்இ எமது சொந்த செயற்பாடுகளினால் எமது நாட்டில் உள்ள பல நீர் ஆதாரங்கள் தற்போது மாசடைந்து வருகின்றன.

அதனால்தான் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை 'சுகாதாரம் தொடர்பான தேசிய திட்டத்தை' உருவாக்கியது. அதன்படிஇ எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக கழிவுநீர் முகாமைத்துவ அமைப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறோம்.

உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட கழிவு நீர் முகாமைத்துவ பிரச்சனையை எதிர்நோக்கி வருகின்றன. வீடுகள்இ வணிகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை நிர்வகிப்பது எளிதல்ல.

கண்டி உலக பாரம்பரிய நகரமாகும். முழு பௌத்த உலகின் மணிமகுடமான புனித தலதா மாளிகை கண்டியில் உள்ளது. எனினும் கண்டியில் சில காலமாக சுற்றாடல் மாசு அதிகரித்து வருகின்றது. இந்த நிலையை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு மக்களின் ஆதரவு தேவை.

மகாவலி கங்கையிலும் முறையற்ற விதத்தில் கழிவுநீர் சேர்க்கப்படுவதை நாம் அறிவோம். அதுமட்டுமின்றி பல இடங்கள் கழிவுநீர் பிரச்சினையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமையை உணர்ந்துஇ ' கழிவுநீர் முகாமைத்துவம் ' திட்டம் வரலாற்று சிறப்புமிக்க கண்டி வாவியின் பாதுகாப்பு மற்றும் கண்டியை மையமாகக் கொண்ட சுற்றுலாத் துறைக்கு பெரிதும் உதவும்.

மக்களின் சுகாதாரத்தை முதன்மைப்படுத்தும் இத்தகைய தேசியத் திட்டம் செயல்படுத்தப்படுவதை எதிர்கால முதலீடாக பார்க்கிறோம். இந்த வேலைத் திட்டம் 2030 வரை செயற்படுத்தப்படும் என எமது அமைச்சர் வாசுதேவ அவர்கள் என்னிடம் தெரிவித்தார்.

கண்டி நகர்ப்புற கழிவு நீர் முகாமைத்துவ திட்டத்திற்கான ஆரம்ப நிதியை ஜய்கா நிறுவனம் வழங்கியுள்ளது. அவர்களுக்கும் ஜப்பானிய அரசாங்கத்திற்கும் நாம் நன்றி கூற வேண்டும்.

தற்போது கொழும்புஇ தெஹிவளைகல்கிசை, மொரட்டுவை போன்ற மாநகர சபை பிரதேசங்களிலும் ஜாஎல, ஏகல, குருநாகல் போன்ற நகரங்களிலும் மாத்திரமே கழிவு நீர் முகாமைத்துவ அமைப்புகள் உள்ளன. நாட்டின் சில பிரதேசங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த கழிவுநீர் மகாமைத்துவ அமைப்புகளை எதிர்காலத்தில் நாட்டின் அனைத்து பிரதான நகரங்களிலும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என கௌரவ பிரதமர் தெரிவித்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணயக்காரஇ கௌரவ இராஜாங்க அமைச்சர்களான சனத் நிசாந்த, திலும் அமுனுகமஇ மத்திய மாகா ஆளுநர் லலித் யூ. கமகேஇ நீர்வழங்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி ப்ரியன் பந்து விக்ரமஇ புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனஇ தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்கஇ ஜப்பான் தூதுவர் மியுகோஷி ஹிதெகிஇ ஜப்பான் தூதரகத்தின் அமைச்சர் தத்சுகி கொடாரோஇ ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (ஜய்கா) பணிப்பாளர் நாயகம் சகொமொதோ டகேமாஇ இலங்கையின் தலைமை பிரதிநிதி திரு.யமடா டெட்சுயாஇ கண்டி மேயர் திரு.கேசர சேனநாயக்கஇ தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் திரு.திலின எஸ்.விஜேதுங்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# போத்துவில் வேகாமம் விவசாயக் காணிகள் 450 ஏக்கர் விடுவிப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். முாரஃப் தெரிவிப்பு

(நிந்தவூர் நிருபர்
ஏ.பி.அப்துல் கபூர் )



கடந்த 30 ஆண்டுகளாக தீர்வு காணப்படாது நீடித்திருந்த பொத்துவில் வேகாமம் விவசாய காணிகள் சுமார் 450 ஏக்கர் நேற்று (18) திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். .எம்.எம் முஷரப் அவர்களின் முயற்சியினால் அடையாளப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு மீண்டும் அதனை பகிர்ந்து அளிப்பதற்காக எல்லையிடப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் அவர்கள் உரிய தரப்பினரிடம் மேற்கொண்ட பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் குறித்த காணிகள் குறித்த வரலாற்று ஆய்வுகள் நிறைவுற்றதையடுத்து, மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் பணிப்புரையின் பேரில், கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களின் செயலணி மூலமாக பொத்துவில் வேகாமம் காணிகளில், செய்கை பண்ண ஏதுவான காணிகளை முதற்கட்டமாக விடுவிப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

குறித்த விவசாய காணிகளை விடுவிப்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மேற்கொண்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் சந்திப்புகளின் விளைவாக நேற்று அதன் இறுதிக்கட்டமாக வன பரிபாலன திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், காணி உரிமையாளர்கள் சகிதம் களவிஜயம் மேற்கொண்டு மீட்கப்படக்கூடிய காணிப் பரப்புகளை எல்லையிட்டு அடையாளப்படுத்தப்பட்டமை முஸ்லிம்களின் காணி விடுவிப்பு தொடர்பில் ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

பொத்துவில் பிரதேசத்திலிருந்து பாராளுமன்ற உறுப்புரிமையை பெற்றதிலிருந்து பொத்துவிலில் மூங்கில் சோலை, கிராண்கேவை, தஹரம்பலை, ஆமவட்டுவான் பிரதேசங்கள் மற்றும் சம்மாந்துறை கரங்காவட்டை காணிகளை செய்கை பண்ணுவதற்கான முதற்கட்ட விடுவிப்புகளை செய்து தொடர்ச்சியாக பொதுமக்களின் காணி உரிமைக்காக உழைக்கும் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் அவர்களுக்கும், காணி விடுவிப்புகளுக்கு வழிகோலும் மேன்மை தங்கிய ஜனாதிபதி, கௌரவ ஆளுநர், திணைக்கள அதிகாரிகள் ஆகியோருக்கும் இப்பிரதேச பொதுமக்கள் உட்பட ஏனைய பிராந்திய பொதுமக்களும் பாராளுமன்ற உறுப்பினருக்கு என் நன்றியறதல் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



# மடத்தடி மீனாட்சி அம்மனாலயத்திற்கு மாத்தளை மேயர் விஜயம்

(காரைதீவு நிருபர்
வி.ரி.சகாதேவராஜா)

மாத்தளை மாநகர மேயர் சந்தனம் பிரகாஷ் வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

ஆலயபரிபாலனசபைத்தலைவர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் அவரையும் அவருடன் வருகைதந்த மாநகரசபை உறுப்பினர் ரி.எஸ்.மோகன் மற்றும் அவர்களது குடும்பத்தினரையும் மாலைசூட்டி வரவேற்றார். ஆலயத்தை சுற்றிகாட்டிய தவிசாளர் புதிய ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் நடைபெறுவதனையொட்டி பணிகள் இடம்பெற்றுவருவதனையும் காட்டினார்.

ராஜநாகம்வதியும்பிரதானபுற்றினை வழிபட்ட மாத்தளைமேயர் பிரகாஷ் அதன்புனரமைப்பிற்கு உதவுவதாகவும் குறிப்பிட்டார்.அதேவேளை மகாகும்பாபிசேகத்திற்கு வருகைதருமாறும் தலைவர் அழைப்புவிடுத்தார்.

பின்னர் மேயர் பிரகாஸ் குழுவினர் வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்திற்கும் விஜயம்செய்து தரிசித்தனர்.

# போத்துவில் பிரதேசத்தில் சுகாதாரப் பிரிவினரால் உணவகங்கள் சுற்றிவளைப்பு





(திருக்கோவில் நிருபர்எஸ்.கார்த்திகேசு)

கல்முனை பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவக நிருவாக எல்லைக்குட்பட்ட பொத்துவில் பிரதேசத்தில் உணவகங்கள் வர்த்தக நிலையங்கள் மற்றும் பழக்கடைகள் என்பன சுகாதாரப் பிரிவினரால் திடிர் சுற்றிவளைப்பு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

இவ் சுற்றிவளைப்பு பரிசோதனைகள் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.யு.அப்துல் சமட்டின் தலைமையில் இன்று முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

இவ் திடிர் சுற்றிவலைப்பின் போது உணவகங்கள் வர்த்தக நிலையங்கள் பழக்கடைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் போன்றன பரிசோதிக்கப்பட்டு மனித பாவனைக்கு பயன்படுத்த முடியாத பொருட்கள் கைப்பற்றப்பட்டதோடு ஒருசில கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இருந்தன.

மேலும் சுகாதார வழிமுறைகளைப் கடைபிடிக்காது செயற்பட்ட உணவகங்கள் பழக்கடை உரிமையாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு இவ்வாறு தொடர்ந்து செயற்படுமிடத்து எதிர்காலத்தில் கடுமையான சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் பொத்துவில் பொது சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு இருந்தன.

இவ் சுற்றிவளைப்பில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.யு.அப்துல் சமட் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் அப்துல் மலீக் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இருந்தனர்.



பிரதமர் மஹி;ந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தையிட்டு பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளர் என்எம். சுகைப் தலைமையில் ஏறாவூர்ப்பற்று மீராகேணி பிரதேசத்தில் நடைபெற்ற மரக்கன்று நடுகை நிகழ்வில் பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

# நாவலடி சந்தியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து மூதூர் வைத்தியசாலையில்



(அ. அச்சுதன் )

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள நாவலடி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று புதன்கிழமை (17) மாலை வேளையில் இடம்பெற்றுள்ளது .

முச்சக்கர வண்டியும் சிறிய ரக உழவு இயந்திரமும் இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் உழவு இயந்திரத்தை செலுத்திச் சென்ற நபர் படுகாயமடைந்து மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான 2 வாகனங்களும் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# நாட்டை நேசிப்பவர்களால் இந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்க முடியாது

## பாராளுமன்ற உறுப்பினர் எஸ் எம் எம் முஷாரப் தெரிவிப்பு

**நிந்தவூர் நிருபர் ஏ.பி.அப்துல் கபூர்**

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரம் சுருங்கியுள்ள இத்தருணத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாடான எமது நாட்டில் இவ்வாறானதொரு தூர நோக்கு மிக்க வரவு செலவுத் திட்டத்தினை நிதி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ச முன்வந்து இக்கட்டான சூழ்நிலையில் தன்னை அர்ப்பணித்து இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையோடு புதிதாக பதவியேற்று சமர்ப்பித்திருக்கின்ற இந்த பாதீட்டினை உண்மையாக நாட்டை நேசிக்கின்ற எந்த ஒரு நபராலும் எதிர்த்து பேச முடியாது என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், நான் ஒரு இளைய தலைமுறையின் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இந்த பாராளுமன்றத்தினை ஒரு புதுமையான பாராளுமன்றமாகவே கருதுகின்றேன். ஏனெனில் இந்த பாராளுமன்றத்தில் ஏதாவது வாக்கெடுப்பு அல்லது சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற போது அதனுடைய நன்மை கருதாமல் எதிர்கட்சி அதனை எதிர்ப்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளதும் ஆளும் கட்சி அதனை ஆதரிப்பதும் என்னால் அவதானிக்க முடிகின்றது.

2019 இறுதி காலப் பகுதியில் இந்த உலகை உலுக்கிய கோரோனா வைரஸ் காரணமாக நமது நாடு ஓர் இக்கட்டான சூழ்நிலையில் காணப்படுகின்ற போது இந்த பாதீடு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றது. எனவே எவ்வாறு ஒரு நாட்டில் யுத்தம் நடைபெறுகின்ற போது ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றாக இணைந்து நாட்டை மீட்பதற்காக கைகோர்க்க முடியுமோ அதே போன்று தான் இந்த நாடு இக்கட்டான நிலைமையில் தற்போது காணப்படுகின்ற பொழுது ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றாக இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்ப ஒரு புதிய முறையை உருவாக்க வேண்டும்.

இந்த இக்கட்டான காலப்பகுதியில் உலக வங்கியின் அறிக்கையின்படி இந்த ஆண்டில் உலகின் பொருளாதாரம் ஐந்து சதவீதத்தால் வீழ்ச்சியுறும் என குறிப்பிட்டிருந்தது. அதேபோன்று ஐக்கிய அமெரிக்காவினுடைய பொருளாதாரம் 6.1 வீதத்தாலும் ஜப்பானின் உடைய பொருளாதாரம் அதே 6.1 சதவீதத்தாலும் சுருங்கி உள்ளது. எனவே மேற்கு நாடுகளின் உலகப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு சுருக்கம் ஏற்பட்டிருப்பது உலகறிந்த விடயமாகும்.

அண்மையில் வெளியான சில சர்வதேச அமைப்புகளினுடைய அறிக்கைகளில் கூட உலகின் பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாத்துறையினுடைய பங்கு கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இன்று வளர்ச்சி அடைந்த நாடான ஜேர்மனி கூட நாணயத்தாள்களினை அச்சிடுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறு சுற்றுலாத்துறையில், ஒரு நாட்டினது அந்நியச் செலாவணியில் , தொழில்வாய்ப்பு துறையில், ஆடை ஏற்றுமதியில் மற்றும் ஏனைய அனைத்து ஏற்றுமதி துறைகளிலும் ஒரு சரிவு ஏற்பட்டு இருக்கின்ற போது இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு இருப்பதனை நாங்கள் எல்லோரும் நினைவு கூற வேண்டும். இன்று உலக நாடுகள் ஒரு இக்கட்டான நிலையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக வளர்ச்சியடந்த நாடுகள் கூட திக்கு முக்காடிக் கொண்டிருக்கின்றன.

இன்று பொருட்களின் விலையானது நமது நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகளில் உள்ள அனைத்து நாடுகளிலும் பொருட்களின் விலை அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு காரணம் உலக பொருளாதாரத்தில் ஒரு தேக்க நிலை காணப்படுகின்றது. இவ்வாறு உலகப் பொருளாதார நிலை ஒரு தேக்க நிலையில் இருக்கின்ற போது வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு நாட்டில் எவ்வாறு பொருளாதார வளர்ச்சியினை எதிர்பார்க்கமுடியும். இருந்த போதிலும் கூட இக்கட்டான சூழ்நிலையில் ஒரு சிறந்த வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் சமர்ப்பித்திருக்கும் போது அதனை விமர்சிப்பது என்னைப் பொருத்தவரையில் மனச்சாட்சிக்கு விரோதமானதாகும்.

கொரோனா தொற்று நோயினால் ஒரு நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கின்ற போது மிக தைரியமாக இந்த நாட்டை பொருளாதார ரீதியில் நிமிர்த்த முடியும் என்ற நம்பிக்கையோடு பலரும் விமர்சிக்கின்ற ஒரு சூழ்நிலையில் இவ்வாறானதொரு வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் சமர்ப்பித்து இருப்பதனை பாராட்டுவதில் நான் எவ்வித தயக்கமும் காட்டப் போவதில்லை. மிக தைரியமாக இந்த வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்து இருக்கின்ற நிதி அமைச்சரின் தூர நோக்கினை நான் பாராட்டுவதில் எனக்கு எவ்வித ஐயமும் கிடையாது.



இவ்வாறான ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நாட்டின் ஆட்சியை மாற்றப் போகிறோம் என்பதில் காட்டுகின்ற அக்கறையை ஏன் ஒரு நாட்டை வளப்படுத்தும் என்ற முன்னேற்றகரமான திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவது இல்லை ஏன் என்ற வினா எழுகின்றது. கடந்த நல்லாட்சியில் 49 சிவில் சமூக சேவை அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டு வந்திருந்தோம். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடனே பிணைமுறி மோசடியில் ஈடுபட்டு அந்த ஆட்சி மாற்றத்தின் ஊடாக இந்த நாட்டு மக்கள் அனுபவிக்க இருந்த அந்த நம்பிக்கையினை தவிடுபொடியாக்கிய பெருமை அந்த நல்லாட்சி அரசாங்கத்தை சாரும் என்பதை நீங்கள் மீட்டி பார்க்கவேண்டும். இந்தச் சூழ்நிலையில் தான் மீண்டும் இந்த நாட்டினுடைய ஆட்சியை எங்களிடம் தாருங்கள் நாங்கள் ஒரு சிறப்பான ஆட்சியை உங்களுக்கு நடாத்திக் காட்டுவோம் என்று கூறுகின்ற எதிர்க்கட்சியினர் அதனை அன்று மைத்திரிரணில் ஆட்சியில் செய்துகாட்டி இருக்க வேண்டும்.

ஆட்சியை மாற்ற போகின்றோம் என்கின்ற தாரகமந்திரம் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் இனிமையாகவும் சுவையாகவும் இருந்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவது இலகுவான விடயமல்ல. இந்த வரவு செலவுத் திட்டத்தில் பல நல்ல விடயங்களை நாங்கள் கண்டு கொள்வதில்லை. குறிப்பாக கல்விக்கான ஒதுக்கீடு 6 சதவீதமாக அமைய வேண்டும் என அன்று நல்லாட்சி அரசாங்கத்தில் நாங்கள் கோரிக்கை விடுத்து இருந்தாலும் அதை அந்த அரசாங்கம் இணங்கி இருந்தாலும் நடைமுறையில் 3 சதவீதம் மாத்திரமே அப்போது அரசாங்கத்தால் ஒதுக்க முடிந்தது.

ஆனால் இன்று நிதி அமைச்சரின் இந்த வரவுசெலவுத் தட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடு % சதவீதத்திற்கும் மேலாக காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும்

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒதுக்கீடுகளின் மூலம் இன்னும் கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு இருக்கின்றது என்பது எனது ஆழமான கருத்தாகும்.

மேலும் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடு இந்த வரவுசெலவுத் திட்டத்தில் காணப்படுகின்றது, ஒட்டுமொத்தத்தில் எளியவர்களுக்கு பயனளிக்கக்கூடிய ஒரு வரவு செலவுத் திட்டமாக இந்த வரவு செலவுத் திட்டத்தை பார்க்க முடிகின்றது. ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்கின்ற அடிப்படையில் நான் இந்த வரவு செலவு திட்டத்திற்கான எதிர்ப்பினை கருதுகின்றேன்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் அதனை நிவர்த்திப்பதற்காக எதிர்க்கட்சியினர் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுங்கள் என்று கூறுகின்றனர். அவ்வாறு எமது பிரச்சினைகளை சர்வதேசத்திடம் சென்று தீர்க்க முற்படுகின்ற போது அவர்கள் முன் வைக்கின்ற நிபந்தனைகள் இந்த நாட்டில் வாழ்கின்ற ஏழை எளியவர்களை வாழ வைக்க முடியாத ஒரு சூழ்நிலைய தோற்றுவிக்கும். குறிப்பாக சர்வதேச நாணய நிதியமானது சமூர்த்தி திட்டத்தினை இல்லாமல் செய்யவும், அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கவும் நிபந்தனைகளை விதிக்கும். இதனை ஏற்றுக் கொண்டால் இதே எதிர்க்கட்சி சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று இன்று ஏழை மக்களின் வயிற்றில் இந்த அரசாங்கம் அடித்துள்ளது என்று கூறும்.

அரசியல் இலாபங்களுக்காக அரச துறையில் அரச கூட்டுத்தாபனங்கள் தொழிலாளர்களை இணைத்துக் கொண்டதன் மூலம் இன்று அரசு துறை நாட்டிற்கு பெரும் சுமை என அண்மையில் நிதி அமைச்சர் கருத்து தெரிவித்திருந்தார். உண்மையில் இன்று 55 பேர் புரிகின்ற ஒருவேலையினை 1500 பேர் புரிகின்றனர். இவ்வாறு அரச துறையில் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை அதிகரிப்பதற்கு மிகப் பிரதானமான காரணம் தங்களது தங்களது அரசியல் கட்சியினை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதனால் ஏற்பட்ட விளைவாகும்.

இன்று இந்த பாராளுமன்றத்திலே 18ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு, 19ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு, 20ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு ஆதரவளித்தவர்கள் இருக்கிறார்கள். 18 ஆதரித்தும் 20 எதிர்த்தவர்கள் இருக்கிறார்கள். 18 எதிர்த்து 20 ஆதரித்தவர்கள் இருக்கிறார்கள். எனவே ஒருவர் ஆளுங்கட்சியில் இருக்கின்றபோது அதனை ஆதரிப்பதும் எதிர்கட்சியில் இருக்கின்ற பொழுது அதனை எதிர்ப்பதுமான ஒரு புதுமையான அரசியல் சூழ்நிலை இந்த பாராளுமன்றத்தில் காணப்படுகின்றது.

எனவே இக்கட்டான இச்சூழ்நிலையில் அரசின் வரவு செலவு திட்டத்தை விமர்சிப்பதை விடுத்து இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு தங்களால் என்ன சிறந்த ஆலோசனைகளை வழங்க முடியும் என்பதனை சிந்தித்து அதனை வழங்குமாறு வேண்டுகின்றேன் என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவித்தார்.

## பிரதமர் தலைமையில் புரோட்லண்ட் நீர் மின் திட்டத்தின் பிரதான சுரங்கப்பாதைக்கு நீர் நிரப்பும் நிகழ்வு





**(க.கிஷாந்தன்)**

லக்ஷபான வளாகத்தின் இறுதி நீர் மின் உற்பத்தி நிலையமான புரோட்லண்ட் நீர் மின் திட்டத்தின் பிரதான சுரங்கப்பாதைக்கு நீர் நிரப்பும் ஆரம்ப நிகழ்வு பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று (18.11.2021) கொழும்பு அலரி மாளிகையில் இணையவழி ஊடாக இடம்பெற்றது.

மஸ்கெலியா ஓயாவின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள அணைக்கட்டிலிருந்து கிதுல்கல கலுகொஹுதென்னே அமைந்துள்ள மின் நிலையம் வரை 3.5 கிலோமீற்றர் நீளத்திற்கு இந்த சுரங்கப்பாதை ஊடாக நீர் கொண்டு செல்லப்பட்டு தேசிய மின் கட்டமைப்பில் வருடாந்தம் இணைக்கப்படும் மின் உற்பத்தியானது கிகாவொட் 126 மணித்தியாலங்களாகும்.

இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டு செலவானது 97 மில்லியன் அமெரிக்க டொலராகும். இத்திட்டத்திற்கு சீன தொழிற்துறை மற்றும் வணிக வங்கி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி ஆகியன நிதி பங்களிப்பு வழங்கியுள்ளன.

குறித்த நிகழ்வில் மின்சக்தி அமைச்சர் காமினி லொகுகே, நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, பிரதமரின் ஒருங்கிணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான், இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் எம்.ஆர்.ரணதுங்க, பிரதி பொது முகாமையாளர் பொறியியலாளர் நொயெல் பிரியந்த, திட்ட பணிப்பாளர் எச்.எம்.விஜேகோன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தின நிகழ்வு

**(எம்.ஏ.றமீஸ்)**




பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தினையொட்டி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான மாவட்ட மத்திய குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட துஆப் பிரார்த்தனை நேற்று (18) இறக்காமம் ஜாமியுத் தையார் ஜுஆம்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது.

பொதுஜன பெரமுன கட்சியின் அம்பாறை மாவட்ட பிராந்திய இணைப்பாளர் எம்.சி.அஹமட் புர்க்கானதலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது மதத் தலைவர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான இணைப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நீண்ட ஆயுளுக்கும், சிறந்த ஆட்சிக்குமாக விஷேட துஆப் பிரார்த்தனை இடம்பெற்றது. இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தலைவராக இருந்து அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து பாரிய அபிவிருத்தித் திட்டங்களை இந்நாட்டில் ஏற்படுத்தியதோடு, நீண்ட காலமாக புரையோடிப்போயிருந்த பயங்கரவாதத்தினையும் இலங்கையில் இருந்து இல்லா தொழிந்தமை பற்றியதுமான விஷேட சொற்பொழிவுகளும் துறைசார் முக்கியஸ்தர்களால் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வின்போது பிரமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினை நினைவாக, இறக்காமம் ஜாமியுத் தையார் ஜுஆம்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போத்துவில் ரோட்டையில் யானைகளின் அட்டகாசம் வீடுகளும் சேதம்



**(செல்வி வினாயகமூர்த்தி)**

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட ரொட்டை 26 கிராம சேவகர் பிரிவில் புதன்கிழமை (17) இரவு வேளையில் ஊருக்குள் புகுந்த காட்டு யானைகள் வீடுகள், மதில்கள், வேலிகள் போன்றவற்றை சேதப்படுத்தியுள்ளன. வீட்டில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த 4 நெல்லு மூடைகளையும் உண்டு விட்டு சென்றுள்ளன. இதேவேளை வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த பெண்மணியொருவர்



மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரொட்டைக்கிராமத்தில் தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்ற நிலையில் இப்பகுதியில் பயிர்செய்கை உட்பட ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக தொடர்ந்த வருகின்ற இப்பிரச்சனையை நிவர்த்தி செய்து யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## தோப்பூரின் முதலாவது பெண் சட்டத்தரணி சத்தியப்பிரமானம்.!

**(அ. அச்சுதன்)**

திருகோணமலை தோப்பூரைப் பூர்வீகமாகவும் மூதூரை வசிப்பிடமாக கொண்ட முகம்மது அலி பாத்திமா மன்ஸிபா கடந்த 15 ஆம் திகதி அன்று இலங்கை உயர் நீதிமன்றின் பிரதம நீதியரசர் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்ட இவர் தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பட்டதாரியுமாவார். இவ்வாறு சட்டத்தரணியாக சத்தியப்பிரமானம் செய்து கொண்ட இவர் தோப்பூரின் முதல் பெண் சட்டத்தரணி என்பது விசேட அம்சமாகும்.



இவர் தனது பதவி மூலம் நமது நாட்டிற்கும், மக்களுக்கும், இன, மத பேதமின்றி தொடர்ந்தும் மகத்தான சேவை புரியவும், மென்மேலும் பதவியுயர்வு அடையவும் பிரதேச மக்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் அருவருப்பான ஆறாவது சூறாவளித்தாக்குதல் மட்டக்களப்பில்

## தமிழர்களைப் பிரித்தாளும் ஆட்சியாளர்கள் அவர்கள் இணைந்து வாழவோ பிரிந்து செல்லவோ அனுமதிப்பதில்லை?

மட்டக்களப்பின் நகர மையத்தில் காணப்படுகின்ற மக்கலராம விகாரையின் விகாராதிபதியாக இருப்பவர்தான் சுமணரத்ததோர். இவரை மட்டக்களப்பில் வீசுகின்ற அடிப்படைவாத சூறாவளி என்று கூறிக் கொள்ளக்கூயளவுக்கு அவரது வக்கிர செயற்பாடுகள் அமைந்துள்ளன. சிங்கள பௌத்த அடிப்படை வாதியாகவும், மதகுருவாகவும் இவர் செயற்படுகின்றார். தமிழர்கள், தமிழ் அதிகாரிகளுக்கு எதிராக இழிவான வார்த்தைகளால் திட்டித் தீர்த்தல், தாக்குதல், இனவாதவாதத்தைக் கக்குதல், சிங்கள தமிழர் முரண்பாடுகள் பகைகளை வளர்த்தல் போன்ற செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்.

அண்மையில் மட்டக்களப்பிலுள்ள பட்டிப்பளைப் பிரதேச செயலகத்திற்குச்சென்று செயலாளரிடம் வனவளத் திணைக்களத்திற்குரிய கெவுளியாமடுவிலுள்ள காணியொன்றினை பன்சாலையொன்றை விஸ்தப்பதற்கு அனுமதி கேட்டுள்ளார். இதனைச் சட்டரீதியான முறையில் தன்னால் தரமுடியாது என்றும் அது தனக்குரிய அதிகாரத்திற்குள் இல்லை என்றும் கூறியதுடன், வனவளத் திணைக்களமானது பிரதேச செயலகத்திற்குக் கையளித்தால் தன்னால் கையளிக்க முடியும் என்றும் தெளிவாகக் கூறியுள்ளார். இதனை ஏற்கமறுத்த தேரர் தூசணமான கெட்ட வார்த்தைகளால் பெண்ணதிகாரியென்றும் பாராமல் கண்டபடி திட்டியுள்ளார். அத்தோடு அங்குள்ள அரச உத்தியோகத்தர்கள் வேலைசெய்ய முடியாதளவுக்குச் சத்தமிட்டு பிரதேச செயலாளரின் அலுவலக வாசலை மறித்தபடி தரையில் அமர்ந்துள்ளார். தொடர்ந்தும் பெண்பிரதேச செயலாளர் என்றும் பார்க்காமல் மிகவும் அருவருக்கத்தக்க உளவியல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தூசணமான வார்த்தைகளால் திட்டியபடி தன்னைக் கடந்து செல்லக்கூடாது எனவும் தனது காவியுடையில் கால்கள் பட்டால் நடப்பது வேறு என்றும் மிரட்டியுள்ளார்.

இந்த நிலையில் அங்கு வந்த பொலிசார் சட்டத்தை நிலைநாட்டாமல் பார்வையாளர்களாக நின்றுள்ளார்கள். அதன் பின்னர் அரச அதிபருக்கு இந்த சர்ச்சை அறிவிக்கப்பட்டதை அடுத்து மட்டக்களப்பில் இருந்து பொலிஸ் அத்தியட்சகர் வருகைதந்துள்ளார். அதன்பின்னரும் வனவளத் திணைக்களக்காணியைப் பிரதேச செயலாளர் தரவேண்டும் என்று அடம்பிடித்துள்ளார். அதன் பின்னர் வளத்திணைக்களம் கையளிக்கும் பட்சத்தில் வளங்க முடியும் என்ற கடிதத்தினை மீண்டும் கிராமசேவையாளர் வழங்கிய பின்னர் அட்டகாசப் பேச்சுடன் வெளியேறியுள்ளார். சுமார் 3 மணித்தியால அலுவலக வேலைகளை இவர் பாழாக்கியுள்ளார். அத்துடன் அலுவலர்கள் அலுவலகத்தினுள் இருக்க முடியாத நிலையில் வெளியேறியுள்ளனர். இதுதான் இந்த அரசாங்கத்தின் ஒரே நாடு ஒரே சட்டம் கோப்பாடா என்று கேட்க வேண்டியுள்ளது

இதே சுமணரத்ன தேரர் இதற்கு முன்பும் இதே கெவுளியாமடுவில் 2016இல் முறையற்ற விதத்தில் காணியினைக் கோரியதுடன் அப்பகுதிக்கிராம சேவையாளர் ஒருவரைப் பறத்தெமிழோ, பல்லோ என்ற கெட்ட வார்த்தைகள் மூலமாகத் தூசித்துள்ளார். அதை விட அருவருப்பான எழுதமுடியாத தூசண வார்த்தைகளையும் பேசியுள்ளார். ஆனால் பொலிசார் கைகட்டி நிற்பதுதான் எரிச்சலைத் தரும் விடயமாகவுள்ளது.



ஜி.ஸ்ரீநேசன், முன்னாள் பா.உ, மட்டக்களப்பு

அத்தோடு பன்குடாவெளி, மட்டக்களப்பு நகர், மயிலம் பாவளி, வேற்றுச் சேனை போன்ற இடங்களில் தனது சகாக்களுடன் அதிரடியாகத் தோன்றி அட்டகாசம், அடிதடியைத் தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். அரச அதிகாரிகளைக் கைகளால் தாக்கியுமுள்ளார். இவர் தொடர்பாக மட்டக்களப்பு நீதிமன்றங்களிலும் வழக்குகள் நிலுவையிலுள்ளன.

இவரது இனவாத மதவாதவக்கிர செயற்பாடுகள் காணொளி மூலமாக உள்நாட்டில் மட்டுமல்லாமல் உலகமெங்கும் பரவியுள்ளன. இவரது செயற்பாடுகள் மியன்மாரின் அடிப்படைவாதியாக இருந்து றோகிங்கியோ முஸ்லிங்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்த அழித்த விராது 96 தேரரின் செயற்பாடுகளுக்கு ஒப்பானதாக உள்ளது. இவர் இலங்கையை மியன்மார் வழிக்கு இழுந்துச்செல்வது போல் தெரிகிறது.





இலங்கையில் சிங்கள தமிழர் முரண்பாடுகள் பகைகள் குரோதங்களை ஏற்படுத்தி அதன் மூலமாக அரசியல் இலாபம் தேடுவதற்கும் தேர்தல்களில் வெற்றியீட்டுதற்கும் இப்படியான வக்கிரமான இளவாதிகள் மதவாதிகள் அதிகார வர்க்க ஆட்சியாளர்களுக்கு தேவைப்படுகிறார்கள் என்பது மாத்திரம் உண்மையாகத் தெரிகிறது. இப்படியான தேரர்கள் இன ஐக்கியத்திற்கு மட்டுமல்ல பௌத்த தர்மத்தின் புனிதத்திற்கும் கேடு விளைவிக்கிறார்கள். நாட்டுக்கும் கெட்ட பெயரைப் பெற்றுக் கொடுக்கிறார்கள். திரைமறைவில் இருந்து இப்படியான வக்கிரமான அடிப்படைவாதிகளை இயக்கும் அதிகார வர்க்கத்தினர் யாவர் என்பதை ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் ஞானசாரர தேரர் தலைமையிலான நியமனம் அப்பட்டமாக வெளிக்காட்டி விட்டது. சட்டத்தை மீறுகின்ற நீதி மன்றங்களை அவமதிக்கின்ற குற்றவாளி ஒருவர் எதிர்காலச் சட்டங்கள், அரசியல் யாப்புத் தொடர்பாகப் பரிந்துரை செய்யுந் தலைவராக நியமிக்கப்பட்டால் இந்த நாட்டிற்கு எதிர்காலமே இல்லை என்பது புலனாகிறது. மத போதனையாளர்கள் மதயானைகள் போல் வெறியோடு அலைந்தால் தேசிய நல்லிணக்கத்திற்கோ, தேசத்தின் விடிவுக்கோ இடமே இல்லை. இவர்கள் தமிழ் பேசும் சமூகத்தவர்களைப் பிரித்தாளுகின்றார்கள். ஆனால் தமிழர்கள் பிரிந்து போகாமல் ஒற்றையாட்சியின் கீழ் இரண்டாந்தர மூன்றாந்தரப் பிரசைகளாக அடிமைகளாக வாழ வேண்டும் என்று தான் ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள். அதற்குத் தமிழர்கள் தயாராக இல்லை என்பது மட்டும் உண்மையாகும். இந்நாடு சட்டவாட்சி நிலவேண்டிய மக்களாட்சி நாடு என்பதை ஆடசியாளர்கள் அடிப்படைவாதிகள் மறக்கக்கூடாது.






## சுவாமி நீலமாதவானந்தஜீ எழுதிய விபுலாநந்த சுவாமியின் இருநூல்கள் வெளியீட்டுவிழா









(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

மட்டு.இ.கிமிசன் துணை மேலாளர் ஸ்ரீமத்சுவாமி நீலமாதவானந்தர் ஜீ எழுதிய, உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஆக்கங்களடங்கிய இருநூல்களின் வெளியீட்டுவிழா கடந்த(17) புதன் கிழமை கல்லடியிலுள்ள சுவாமியின் புனரமைக்கப்பட்ட சமாதி அமைந்துள்ள மணிமண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

'விபுலாநந்தம்' என்ற தமிழ்நூலும் என்ற ''Essay of Swami Vipulanantha'' ஆங்கிலநூலும் வெளியிட்டுவைக்கப்பட்டது. இந்த நூல்களை இந்துசமய கலாசார திணைக்களம் பதிப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

1008பக்கங்களுடன்கூடிய 'விபுலாநந்தம்' என்ற தமிழ்நூலும் 252பக்கங்களுடைய ''Essay of Swami Vipulanantha'' ஆங்கிலநூலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரனினால் இலங்கை இராமகிருஸ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மஹராஜ்ஜுக்கு வழங்கி வெளியிட்டுவைக்கப்பட்டது. நூல்வெளியீட்டுவிழாவில் வரவேற்புரையுடன்கூடிய அறிமுகவுரையை துணை மேலாளர் நூலாசிரியர் ஸ்ரீமத்சுவாமி நீலமாதவானந்தர் ஜீ நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர் வே.ஜெகதீசன் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இலங்கை இராமகிருஸ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மஹராஜ் ,இந்துசமய கலாசார திணைக்களம் பதிப்பித்த சுவாமி நீலமாதவாநந்தா ஜீயின் இருநூல்களை வெளியிட்டுவைத்து ஆசியுரையை நிகழ்த்தினார்.

விழாவில், கிழக்குபல்கலைக்கழக விபுலாநந்தா அழகியல்கற்கைகள் நிறுவன பணிப்பாளர் திருமதி பாரதி கென்னடி, காரைதீவு விபுலாநந்தா ஞாபகாடர்தத் பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, மட்டக்களப்பு விபுலாநந்த நூற்றாண்டுவிழாக்குழுத் தலைவர் க.பாஸ்கரன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு சுவாமிகள் நூல்பிரதிகளை வழங்கினார். குறித்த நூல்கள் அதிதிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன. மட்டு.இ.கிமிசன் மேலாளர் ஸ்ரீமத்சுவாமி தக்ஷயானந்தா ஜீ நன்றியுரையாற்றினார்.

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளரின் நினைவு வளாகத் திறப்புவிழாவும் அன்று நடைபெற்றது. மட்டு.அம்பாறை மாவட்டங்களிலிருந்தும் குறிப்பாக சுவாமிகள் பிறந்த காரைதீவிலிருந்தும் இ.கி.மிசன் அபிமானிகள் கலந்துகொண்டார்கள். முன்னதாக பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட சுவாமியின் மறுசீரமைக்கப்பட்ட சமாதி அதிதிகளால் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டன. இ.கி.மிசன் சுவாமிகள் பஜனாவளியுடன் புஸ்பாஞ்சலி செலுத்தி தீபாராதனை காட்டி ஆசீர்வதித்தனர். பின்பு வளாகத்திலுள்ள சுவாமி விபுலாநந்த மணிமண்டபத்தில் அரங்கநிகழ்வுகள் ஆரம்பமாயின.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT

# சுவிற்சர்லாந்து செங்காலன் சென்மார்க்கிறெத்தன் ஆலயத்தில் இசைத்தட்டு வெளியீட்டு விழா









சுவிற்சர்லாந்து செங்காலன் சென்மார்க்கிறெத்தன் பதியில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கதிர்வேலாயுதசுவாமிகளின் பெருமைகளையும் சிறப்புகளையும் எடுத்தியம்பும் ஆறு பாடல்களைக் கொண்ட இரண்டு இறுவெட்டுக்கள் வெளியிட்டுவைக்கும் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கந்தஷடி 3வது நாளன்று சுழசளஉடயஉட ளுவயனவாழக ளுயயட மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

தாயகத்தில் சாவகச்சேரி கச்சாய் உசனைச் சேர்ந்த அற்புதராஜா நிமால்நிதி தம்பதிகளின் மகளான ஐரோப்பா இசைக்குயில் அர்ச்சனா அற்புதராஜா தனது இனிமையான குரலில் கதிர்வேலவனின் பெருமைகளை எடுத்தியம்பும் ஆறு பாடல்களை பாடியுள்ளார். இந்தப் பாடல்களைக் கொண்ட இசைத்தட்டுகள் தாயக இசைவிற்பன்னர்களின் பின்னணி இசையுடன் வெளிவந்துள்ளன.

இந்த இசைத்தட்டுகளின் வெளியீட்டு விழா கதிர்வேலாயுதசுவாமி ஆலய நிர்வாகத் தலைவர் வேலுப்பிள்ளை கணேசகுமார் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளை அடுத்து ஊர்வலமாக தனியார் மண்டபம் ஒன்றிற்கு எடுத்து வரப்பட்ட இசைத்தட்டுகள் அங்கு வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டன.

மங்களவிளக்கேற்றல், பொதுச்சுடர் ஏற்றல், அகவணக்கம் ஆகிய நிகழ்வுகளை அடுத்து ஆலயபிரதமகுரு முத்துச்சாமிக்குருக்கள், லண்டனிலிருந்து வருகைதந்த சோமஸ்கந்தகுருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். அர்ச்சனாவின் தந்தையும் ஆலய பொருளாளருமான சதா அற்புதராஜாவின் வரவேற்புரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆலயத்தலைவர் வே.கணேசகுமாரின் தலைமையுரையை அடுத்து நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஹற்றன் கல்விச்சேவையில் பணியாற்றி தற்சமயம் ஜெனிவாவில் வசித்துவரும் கந்தையா அருந்தவராஜா சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம்பெற்றன. நோர்வேயிலிருந்து வருகை தந்த தபேலா கலைஞர் சிவா சக்திதரன், ஊடகவியலாளர் எஸ்.பிரபா, லுட்சேர்ண் துர்க்கையம்மன் கோவிலைச் சேர்ந்த பவான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

வாழ்த்துரைகளைத் தொடர்ந்து ஒலிவடிவில் கலைமாமணி நித்யஸ்ரீ மகாதேவன்,



இசைச்செம்மல் சீர்காழி ஜி. சிவசிதம்பரம் ஆகியோருடன் மேலும் பல கலைஞர்களும், புத்திஜீவிகள், உறவினர்களென தெரிவித்த வாழ்த்துக்கள் அகண்ட திரையில் ஒலிபரப்பப்பட்டன.

அதன்பின்பு இசைத்தட்டு வெளியீடு இடமபெற்றது. திரு 50 நிறுவன உரிமையாளர் திருச்செல்வம், செல்லையா குலசேகரராஜசிங்கம், மூத்த ஊடகவியலாளர்களான ஞானசுந்தரம் குகநாதன்,இரா. துரைரத்தினம் ஆகியோர் முதலில் இசைத்தட்டைப் பெற்று வெளியிட்டு வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெற்றது முதலில் பாடல்களைப் பாடிய இசைக்குயில் அர்ச்சனா அற்புதராஜாவிற்கு ‘நாதலய இளவரசி’ என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். பின்னணி இசை வழங்கிய தாயகக் கலைஞர்களான சுகுமார் முகிலரசன் அவர்களுக்கு ‘இசைவேந்தன்’ என்ற பட்டமும் அகஸ்ரின் ஐவரி அவர்களுக்கு ‘இசை ஞான சாகரம் ’ என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பாடல்களை சிறப்பாக ஆக்கம் செய்தவர்களான இன்பம் அருளையா அவர்களுக்கு ‘விவேக வித்தகர்’ என்ற பட்டமும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக பேராசிரியர் கவிஞர் பரமேஸ்வரன் அவர்களுக்கு ‘ஆன்மீக அருட் கவியரசு’ என்ற பட்டமும் ஏற்பாட்டாளர் வேலுப்பிள்ளை கணேசகுமார் அவர்களுக்கு ‘ சைவத் தமிழ் காவலர்’ என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் விசேட நிகழ்வுகளாக இந்திரன் குழுவினரின் மங்கள இசை, திருக்கோணேஸ்வர நடனாலயத்தின் ஆசிரியை சுதாகரன் மதிவதனியின் மாணவிகள் நடன இசை, கவிநடன இசை ஆகியன இடம் பெற்றிருந்தன.

இறுதியில் அர்ச்சனா அற்புதராஜா ஏற்புரை வழங்கினார்.

தமிழக முன்னணி பாடகி கலைமாமணி நித்தியஸ்ரீ மகாதேவன் தமது வாழ்த்துச் செய்தியில் அர்ச்சனாவின் பாடல்களைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். திறமையான பாடகி இனியகுரல், உச்சரிப்புதெளிவு,தாளக்கட்டு ஆகியவற்றை நோக்கும் போது சிறப்பான எதிர்காலம் உண்டு எனத் தெரிவித்தார்.

இசை இமயம் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் தனது செய்தியில் தாயக மண் வீசும் வகையில் அருள்மயமாக அமைந்திருந்தது அர்ச்சனாவின் பாடல்கள் என்று தெரிவித்துள்ளார்.

தமிழக, மலேசிய ஆதீனங்கள் இசைவிற்பன்னர்கள்,அரசியல் பிரமுகர்கள், சமயப்பெரியார்கள் என 50க்கு மேற்பட்டவர்கள் ஒலி வடிவில் அர்ச்னாவிற்கு வாழ்த்துக் கூறியுள்ளனர்.

அர்ச்சனாவின் பாடல்கள் தாயகக் கலைஞர்களின் பின்னணியில் தாயக நினைவை மீட்டுச் சென்றது. நல்லதொரு இசைநிகழ்வு மண்டபம் நிறைந்த மக்களின் கரகோசத்துடன் நிறைவுற்றது.

இந்நிகழ்ச்சியை சிவநெறிச்செல்வர் ஆறுமுகம் செந்தில்நாதன் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

தகவல்:- மூத்த ஊடகவியலாளர் குகா



# கிழக்கில் 722 ஆசிரியர்களுக்கு வருடாந்த இடமாற்றம்!

## ஜன.3முதல் அமுல்: பதிலீடாக 755 ஆசிரியர்கள் இடமாற்றம்!

## இன்று முதல் கடிதங்கள்: 4 வலயங்களுக்கான இடமாற்றம் நிறுத்தம்!

## கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் புள்ளநாயகம் தெரிவிப்பு.

**( வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் வருடாந்த ஆசிரியர்இடமாற்றத்தின்கீழ், இம்முறை 722ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பதிலீடாக %55ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர். எதிர்வரும் 2022ஜனவரி 3ஆம் திகதி முதல் இது அமுலுக்குவருகிறது.



இவ்வாறு கிழக்குமாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் பற்றிக்கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொரோனாவுக்குப்பின்னரான தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகள் இயங்கத்தொடங்கியுள்ளன. அதேவேளை வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்காக விண்ணப்பித்த ஆசிரியர்களில் பொருத்தமான 722 பேர் இடமாற்றத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்களது இடமாற்றத்தால் ஏற்படும் பாடரீதியான வெற்றிடத்தை நிரப்புவதற்கு வசதியாக 755ஆசிரியர்கள் கூடவே இடமாற்றப்படுகின்றனர்.

அவர்களுக்கான இடமாற்றக்கடிதங்கள் இன்று(19)வெள்ளி முதல் வலயம் வலயமாக அனுப்பிவைக்கப்பட்டுவருகின்றன. மேன்முறையீடு செய்யவிரும்புவர்கள் மார்கழி 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்.

**4வலயங்களில் இடமாற்றம் நிறுத்தம்;!**

இதேவேளை இவ்விடமாற்றங்கள் நான்குவலயங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது.சமப்படுத்தலின்பின்னர் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

கல்முனைதிருமலைவடக்குமூதூர் மகாஓயா ஆகிய நான்கு கல்வி வலயங்களுக்கு இடமாற்றப்பட்டோர் அவ்வலயங்களுக்கு தற்சமயம் செல்லமுடியாது. ஆனால்,அங்கிருந்து வேறு வலயங்களுக்கு வருடாந்த இடமாற்றத்தில் இடமாற்றம் பெற்றவர்கள் குறித்தவலங்களுக்கு செல்லவேண்டும்.

அங்கு ஏலவே ஆசிரியர்கள் மிதமிஞ்சிகாணப்படுவதால இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கான சமப்படுத்தல் இடமாற்றம் இடம்பெற்றபின்னர் இவ் வருடாந்த இடமாற்றம் அங்கு அமுலாகும்.

# குழந்தைகளுக்கு ஒரு வயது வரை மஞ்சள் கரு மாத்திரம் கோடுப்பது நல்லது

## விசேட குழந்தை நல வைத்திய நிபுணர் விஜி திருக்குமார்

**(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)**

குழந்தைகளுக்கு 6 மாதம் தொடக்கம் முட்டை கொடுக்க ஆரம்பிக்கலாம். ஒரு வயது வரை மஞ்சள் கரு மாத்திரம் கொடுக்க வேண்டும். வெள்ளை கரு சில சமயம் ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். இவ்வாறு ஒவ்வாமை ஏற்பட்டால் ஒரு வயது முடிவில் வழங்கப்படும் தடுப்பூசி வழங்க முடியாது பிற்போட நேரிடும். எனவே ஒரு வயது வரை மஞ்சள் கரு மாத்திரம் கொடுப்பது நல்லது.

என்று கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும் மட்.போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான வைத்தியகலாநிதி வைத்தியர்.விஜி திருக்குமார் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஒரு வயதின் பின்னர் முழு முட்டையையும் கொடுக்க முடியும். ஒரு நாளைக்கு எத்தனை முட்டைகளையும் கொடுக்க முடியும். முட்டை கொலஸ்ரோல் நிறைந்த உணவு அதனால் சமிபாடு அடையாமல் மலத்துடன் வெளியேறும் என்பது தவறு. முட்டை இலகுவாக சமிபாடு அடையக்கூடிய புரதச் சத்து மிகுந்த உணவாகும். ஒரே நிறை உடைய மீன் போன்றவற்றை விட முட்டையில் அதிக புரதம் உள்ளது.



முட்டையை அவித்து கொடுப்பதை விட பொரித்து கொடுக்கும் போது புரதச் சத்துடன் கொழுப்பு சத்தும் சேர்த்து கிடைக்கும். மெலிதான பிள்ளைகளுக்கு இவ்வாறு பொரித்து கொடுப்பது நல்லது. நிறை கூடிய பிள்ளைகளுக்கும் சோற்றை குறைத்து முட்டைஇ மீன் போன்ற புரத உணவுகளை கொடுக்கலாம். புரதச் சத்து வளர்ச்சிக்கும்இ நோய் எதிர்ப்பாற்றலுக்கும் தேவை. மேலும் புரதச்சத்து அதிகம் கொடுப்பதால் எந்த தீங்கும் ஏற்படாது.

ஒப்பீட்டளவில் மீனை விட முட்டை விலை குறைவானதுடன் புரத சத்து அதிகம். எனவே குழந்தைகளுக்கு முட்டையை நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

# திருவள்ளுவர் மனித வாழ்வுக்கு நல்லதை விட்டுச் சென்றவர் நாம் ஒன்றுபட்டு மன்னாரின் முன்னேற்றத்தை காண்போம்

## அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமேல்

**(வாஸ் கூஞ்ஞ)**

திருவள்ளுவர் மனித வாழ்வுக்காக சிறுவர் தொடக்கம் பெரியோர் வரை தொட்டுச் சென்றவர். இவ்வாறான ஒருவரை மன்னார் மாவட்டத்தில் நினைவுகூர்ந்து விழா எடுப்பது எமக்கு கிடைத்த பாக்கியம். நாம் இனம் மதம் வேறுபாடுகளை களைந்து ஒன்றுபட்டு மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு ஒத்துழைப்போம். அத்துடன் மன்னார் மாவட்டத்தில் இதுவரை மாவட்ட கீதம் இல்லாத நிலை தீர்வுக்கு ஒத்துழைத்த அனைவருக்கும் பாராட்டுக்கள் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்ட செயலகமும், மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவையும் இணைந்து மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனின் ஒருங்கமைப்பில் திருவள்ளுவர் விழா செவ்வாய் கிழமை (16.11.2021) மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தின் முதல் பெண்மணியாக மன்னார் மாவட்டத்தின் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் பதவியேற்று ஓராண்டு நிறைவையும் இன்று நினைவு கூறப்பட்டது.

மன்னார்மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ் விழாவுக்கு தலைமை



தாங்கி தொடர்ந்து உரையாற்றுகையில்

நான் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக பதவியேற்று இன்று செவ்வாய் கிழமை (16.11.2021) ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

இந்த காலத்தில் எனக்கு நல்லாசி வழங்கிய மதத் தலைர்கள், எனது பணியின்போது என்னோடு தோலோடு தோல் நின்று செயல்படும் பதவிநிலை அதிகாரிகள், அனைத்து பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலக உத்தியோகத்தாகள் எனது மாவட்ட மக்கள் மற்றும் எமது ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்த்திய நன்றிகள் பல.

மாகாண சபையில் நான் ஒரு அதிகாரியாக இருந்தபொழுது இந்த திருவள்ளுவர் தினத்தை அங்கு கொண்டாடினோம்.

ஆனால் இன்றைய தினம் (16.11.2021) நாங்கள் எமது மன்னார் மாவட்டத்தில் கொண்டாடுவதற்கு எமக்கு வாய்ப்பு கிடைத்தமை எமக்கு பெரும் மகிழ்ச்சி.

இவ் தினத்தை முன்னிட்டு நாம் கவிதை, பேச்சு, கட்டுரை இவ்வாறு பல போட்டிகளை நடாத்தினோம். இதில் பங்குபற்றிய அரச ஊழியர்கள் மாணவர்கள் இன்னும் பலர் பங்குபற்றியிருந்தனர் இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாட்டும்.

திருவள்ளுவரைப்பற்றி நான் பல புத்தகங்களை படித்தபோது திருவள்ளுவரின் உருவம் எப்படி இருக்கும் என்பது எங்கும் பதிவில் எனக்கு தோன்றவில்லை. இருந்தும் பிரான் சீஸ் வாகிட் என்பவர்தான் திருவள்ளுவர் இப்படித்தான் இருப்பார் என ஒரு உருவத்தை உருவாக்கினார் என கூறப்படுகின்றது.

முதலில் இவரின் உருவம் காவி உடையுடன் நிர்மானிக்கப்பட்டது. பின் 1950 ஆம் ஆண்டு இவரின் உடை வெள்ளை நிறத்தில் வடிவமைக்கப்பட்டது.

திருவள்ளுவருக்கு பல பெயர்கள் சூட்டப்பட்ட பொழும் மக்களின் ஒவ்வொரு வாழ்க்கை முறையையும் அவர் கூறியுள்ளார். அதாவது குழந்தைகள் தொடக்கம் பெரியோர் வரைக்கும் அவர் தொட்டுச் சென்றுள்ளார்.

இப்படி நல்வழி காட்டிச் சென்றவருக்கு நாம் விழா எடுப்பது சாலச் சிறந்தது.

எமது மன்னார் மாவட்டத்துக்கு இதுவரை ஒரு மாவட்ட கீதம் இல்லையென இருந்தது.

இதை எமது மன்னார் சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர் எமக்கு சுட்டிக்காட்டி இருந்தார். ஆகவே மாவட்ட கீதம் உருவாக்க எல்லா மக்களினதும் பங்களிப்பு இருக்க வேண்டும் என உணர்ந்து இதில் ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் பங்களிப்பை வழங்குங்கள் என பொது அறிவித்தல் வழங்கப்பட்டது.

இது மாவட்டம் கடந்து மாகாணம் கடந்து அப்புத்தலை வரைக்கும் சென்று பலர் மன்னார் மாவட்டத்தின் கீதத்தின் ஆக்கத்தை எமக்கு பல வடிவத்திலும் அனுப்பி வைத்திருந்தனர்.

மாவட்டத்தின் அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டதாக எவரினதும் ஆக்கங்கள் முழுமயாக இல்லாமையால் முழுமையாக இருக்க வேண்டும் என உணர்ந்து இதற்கான ஒரு குழுவை நியமித்து அனுப்பப்பட்ட அனைத்து ஆக்கங்களும் இசைகளையும் நன்கு பரிசிலித்து அவற்றை தொகுத்து (16.11.2021) இந்த மாவட்ட கீதம் வெளியிடப்படுகின்றது.

எனது பதவி ஏற்ற முதல் வருட ஞாபகமாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தில் செயல்பட்டவர்களுக்கு நான் நன்றிகூற கடமைபட்டவள்.

தேசிய கீதம் போன்று பலர் இணைந்து இசைப்பதுபோல் எமது மாவட்ட கீதமும் தனி நபர் கீதமாக அமையாது பலர் இணைந்து பாடியுள்ளது ஒரு சிறப்பாகும். இதில் பங்களிப்பு செய்த ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவித்து நிற்கின்றேன்.

எமது மாவட்டத்திலே இனம் மதம் வேறுபாடின்றி ஒருவரை ஒருவர் நன்கு புரிந்த கொண்டு நாம் மாவட்ட மக்கள் என நினைத்து ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து புரிந்துணர்வோடு மகிழ்ச்சியுடன் நாம் இந்த மாவட்டத்தில் மன அமைதியுடன் வாழ்ந்து மாவட்டத்தின் வளர்ச்சிக்கு ஒன்றிணைவோம் என இவ்வாறு இவ் நிகழ்வின் தலைமை உரையில் தெரிவித்தார்.

# அவிசாவளை பேன்றிக் தோட்ட மக்கள் போராட்டம்



**(க.கிஷாந்தன்)**

அராஜகத்தில் ஈடுபடும் தோட்ட அதிகாரியை பதவி நீக்கம் செய்யுமாறு வலியுறுத்தி அவிசாவளை பென்றிக் தோட்ட மக்கள் நேற்று (18.11.2021) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு அவிசாவளை பிரதான வீதியில் பென்றிக் தோட்டத்துக்கு செல்லும் வழியை மறித்தே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தோட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் பென்றிக் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை, தோட்ட அதிகாரி பலவந்தமாக உடைத்துள்ளார். இதனை தடுக்க முற்பட்ட வயோதிபப் பெண்ணையும் தாக்கியுள்ளார் என மக்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து குறித்த வயோதிபப் பெண்ணின் மகன்மார், தோட்ட அதிகாரியை தாக்கியுள்ளனர்.

வயோதிபப் பெண்ணும், தோட்ட அதிகாரியும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றனர். பொலிஸாரும் தோட்ட அதிகாரிக்கு சார்பாகவே செயற்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்நிலையிலேயே பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி வேண்டும் எனவும், குறித்த தோட்ட அதிகாரியை பணிநீக்குமாறு வலியுறுத்தியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



# வரலாறு என்பது நிகழ்வுகள் நடந்த சம காலத்திலேயே பதிவு செய்யப்பட வேண்டும்

## முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ்

(வாஸ் கூஞ்ஞ)

வரலாறு என்பது நிகழ்வுகள் நடந்த சம காலத்திலேயே பதிவு செய்யப்பட்டு ஆதாரப்படுத்தபட வேண்டும் அதுவே எதிர்காலத்தில் அதன் உண்மைத் தன்மைகளை உறுதி செய்யும். இவ்வாறான உண்மைகளை தொழில் நுட்ப முறைகளினில் மாற்றியமைக்க முடியாது. தமிழர்களின் உண்மையான பூர்வீக வரலாறுகளை மறைக்கும் பாரிய நிகழ்ச்சித் திட்டத்தில் சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் செயற்பட்டு வரும் போது தமிழர்கள் தடைகளுக்கு மத்தியில் அந்த வரலாற்று உண்மைகளை உயிர்ப்புடன் அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டிய தார்மீக கடமையை கொண்டுள்ளனர் என்பதை ஒவ்வொரு தமிழரும் மறந்து விட முடியாது என முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் செய்தியில்;

தமிழர்கள் தாம் வாழும் சம காலத்து வரலாற்று நிகழ்வுகளையே திரிபு படுத்தும் அபத்தமான காரியங்களில் இறங்கி விடக் கூடாது. காரணம் வரலாறு என்பது நிகழ்வுகள் நடந்த சம காலத்திலேயே பதிவு செய்யப்பட்டு ஆதாரப்படுத்தபட வேண்டும் அதுவே எதிர்காலத்தில் அதன் உண்மைத் தன்மைகளை உறுதி செய்யும். இவ்வாறான உண்மைகளை தொழில் நுட்ப முறைகளினில் மாற்றியமைக்க முடியாது. உதாரணமாக மகாவம்சத்தில் அதன் உண்மைத் தன்மைகளை ஏற்க மறுப்பதற்கான காரணம் அந்த நூலில் இடம் பெற்ற சம்பவங்கள் கி மு 6 நூற்றாண்டில் நடந்தவை ஆனால் அதனை எழுதிய நூலாசிரியர் கி பி 6 நூற்றாண்டில் வாழ்ந்தவர் இந்த வேறுபாட்டுடன் குறிப்பிட்ட பல விடையங்களுக்கு ஆதாரம் இல்லை ஆகவே இவ்வா



றான நிலை எதிர்காலத்தில் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாறுக்கும் ஏற்பட்டு விடக் கூடாது. தமிழர்களின் விடுதலைப் போராட்ட உண்மைகளை சம காலத்திலேயே மாற்றியமைத்தால் இனத்தின் வரலாற்று இருப்புக்கு பாரிய பின்னடைவாக அமைவது மாத்திரமல்ல விடுதலைப் போராட்ட உண்மைகள் மறைக்கப்பட்டு விடும்.

சிங்கள் ஆட்சியாளர்கள் தடுக்கின்றார்கள் நினைவேந்தல்களை செய்யும் போது பயங்கரவாத தடைச் சட்டம் பாயும் என்பதற்காக வரலாற்று உண்மைகளை மாற்றி நினைவேந்தல் செய்வது ஆரோக்கியமான பணி அல்ல.

1948 ஆண்டில் இருந்து இன்றுவரை தொடரும் அடக்குமுறைகள் அழிவுகள் தியாக செயற்பாடுகள் யாவும் திரிபு படுத்தப்படாமல் தடைகளுக்கு மத்தியில் அனுஸ்டித்து அதன் உண்மைகளை இளைய தலைமுறைக்கும் உலகிக்கும் சொல்ல வேண்டும். தடைகள் என்பது தமிழ் மக்களுக்கு புதிய விடையம் இல்லை.

வடக்கு கிழக்கில் வாழும் அனைத்து தமிழர்களும் இனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கும் இன ஒற்றுமைக்கும் தமிழன் என்ற அடையாளத்துடன் பணியாற்றியதை யாரும் மறந்து விடமாட்டார்கள். இவ்வாறான சூழ் நிலையில் தற்போது வடக்கு கிழக்கு ஆயர்களின் ஒன்றியம் எடுத்த முடிவை மீள் பரிசீலனை செய்யுங்கள். யுத்தகாலத்திலும் அதற்கு பின்னதான மக்களின் புனர் வாழ்விலும் ஆயர்களது பணியை வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாது அவை மிக அளப்பரிய பணி.

தமிழர்கள் ஆகிய நாம் எங்களுக்குள் முரண்படும் நிலையை தோற்றுவிக்காமல் வார்த்தைகளால் பொது வெளியில் விமர்சிக்காது ஒற்றுமையாக பயணிப்போம்.

மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படு கொலை இ நவம்பர் 2% மாவீரர் நாள் உள்ளிட்ட அனைத்து நினைவேந்தல்களையும் தொடர்ந்து அதே காலப்பகுதியில் நடாத்தி சத்திய வேள்வியில் ஆகுதியாகிய அத்தனை தியாகிகள் மக்களினதும் வரலாறுகளையும் பாதுகாத்திடுவோம்.

# 20 வருட உத்தரவாதம் கிடைத்த பின்னரே கல்முனை பேருந்து நிலைய அபிவிருத்திக்கு அனுமதித்தோம்

## கல்முனை முதல்வர் ஏ.எம்.றக்கீப் தெரிவிப்பு.

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பேருந்து நிலையத்தில் பதிக்கப்படும் கற்களை உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான பொறியியல் உசாத்துணை நிர்மாண சேவைகள் நிறுவனம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பன பரீட்சித்து இந்த கற்களை பதிப்பது தொடர்பில் திருப்திகரமான அறிக்கை சமர்ப்பித்துள்ளது. பின்னர் கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலும் பரிசோதனைகளை மேற்கொண்டு தரத்தை உறுதிப்படுத்தியுள்ளோம். 50 தொன் எடையுள்ள வாகனத்தை தாங்கும் வலுமிக்கதாக இந்த கற்கள் உள்ளது. பதிக்கப்படும் கற்கள் சாதாரணமானவற்றை விட 06% பலமானதாக உள்ளதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மட்டுமின்றி 20 வருட கால உத்தவாதமும் வழங்கப்பட்டுள்ளது. அதனால் அபிவிருத்தி பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அனுமதித்துள்ளோம் என கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீப் தெரிவித்தார்.

நேற்று பஸ்நிலைய புனரமைப்பு தொடர்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக விளக்கும் ஊடக சந்திப்பொன்று நேற்று மதியம் (18) கல்முனை முதல்வரின் காரியாலயத்தில் இடம்



பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு பேசிய அவர்,

இலங்கை முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அம்பாறை மாவட்ட முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கல்முனையின் தேவைப்பாடுகள், கல்முனையின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவேண்டிய கட்டாயத்தின் நிமிர்த்தம் கல்முனை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் அவர்கள் அரசுக்கு வழங்கிய ஆதரவின் காரணமாக கிடைக்கப்பெற்ற நன்மைகள் ஏராளம். அதில் ஒன்றே கல்முனை மத்திய பஸ் நிலைய அபிவிருத்திக்காக கடலோர பாதுகாப்பு கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமூதாய தூய்மை இராஜாங்க அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 18.7 மில்லியன் ரூபாய் நிதி. அதனை கொண்டு புனரமைக்கப்படும் பஸ் நிலையமானது மக்களுக்கு நீண்டகாலப்பாவனைக்கு உதவும் என்ற உத்தரவாதம் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1000 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் கல்முனை முதலில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் கல்முனை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் எடுத்த கடுமையான முயற்சியின் காரணமாக பின்நாட்களில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இந்த பஸ்நிலைய அபிவிருத்தி தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபை தனது நிதியை கொண்டு இவ்வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க எண்ணி தனது பொறியியலார்கள், கட்டிட துறைசார் வல்லுநர்களினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் பின்னரே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்தை எதிர்காலத்தில் மின்விளக்குகள், மரங்களை கொண்டு அழகுபடுத்த உள்ளோம். அதற்கான திட்டமிடல்கள் எங்களின் கைகளிலுள்ளது.

இதேபோன்றே வேலைத்திட்டம் அம்பாறை, மட்டக்களப்பு, மூதூர், கொழும்பு, மொரட்டுவ, ஹம்பாந்தோட்டை பஸ்நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்துள்ளது. இங்கு காபட் இடுவதாக இருந்தால் 01 இஞ்ச் அளவில்தான் விடமுடியும். அது 05 வருடங்களுக்கு மேல் நிலைத்து நிற்காது. இந்த வேலைத்திட்டங்களை பல உயரதிகாரிகள் பார்வையிட்டு சிறந்தமுறையில் நடைபெறுவதாக உறுதிப்படுத்தியுள்ளார்கள். நான் முதல்வராக இருந்தாலும், இல்லாமல் விட்டாலும் கல்முனை மாநகரத்தில் வாழ்பவன். எனது பரம்பரையை சபிக்குமளவுக்கு நான் எந்த துரோகத்தையும் கல்முனைக்கு செய்ய மாட்டேன் என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் நேற்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். நிஸார் உட்பட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சாய்ந்தமருதில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சாய்ந்தமருது கடற்கரை பகுதியில் வைத்து போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று மாலை (17) கைது செய்யப்பட்டார்.

பெரியநீலாவணை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த பகுதிக்கு சென்ற விசேட அதிரடிப் படையினர் சிவில் உடையில் குறித்த நபரோடு போதைப் பொருளை வாங்குபவர்கள் போன்று சூட்சுமமான முறையில் குறித்த நபருடன் உரையாடினர். பின்னர் அதிரடிப்படையினருக்கு போதை பொருளை விற்பனை செய்ய முற்பட்ட வேளையில் இவர் கைது செய்யப்பட்டார்.

35 வயதுடைய குறித்த நபரிடம் இருந்து விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட 5.250 கிராம் நிறையுடைய ஐஸ் போதைப்போதைப் பொருளும் இதற்கு பயன்படுத்திய மோட்டார்சைக்கிலும் கைப்பற்றப்பட்டன. நான்கு பிள்ளைகளின் தந்தையான குறித்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் 76 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இரு வீதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் துவா பிரார்த்தனையும்





(வி.சுகிர்தகுமார்)

கௌரவ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களின் 76 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும் அவர் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அரசில் பிரதமராக பதவியேற்று இரண்டு வருட பூர்த்தியை கொண்டாடும் வகையிலும் அக்கரைப்பற்று மற்றும் ஆலங்குளம் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள இரு வீதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் துவா பிரார்த்தனையும் நேற்று (18) இடம்பெற்றது.

அம்பாரை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர் ஐ.எச்.எம்.வஹாப் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் இணைப்பாளர் நிசாட் ஏ காதர் மற்றும் சட்டத்தரணி எஸ்.எம. எம்.பைரூஸ் உள்ளிட்ட பலர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளை நகர வீதிகளுடன் இணைக்கும் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக குறித்த வீதிகள் செப்பனிடப்படவுள்ளன. இதன் பொருட்டு அம்பாரை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர் ஐ.எச். எம்.வஹாப் மேற்கொண்ட முயற்சியின் பயனாக அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மேற்கு வீதிக்கு 35 மில்லியன் ரூபாவும் ஆலங்குளம் உள் வீதிக்கு 45 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் வரவேற்க்கப்பட்ட நிலையில் வீதி அமைப்பிற்கான பெயர்பலகையினை திறந்து வைத்ததுடன் அடிக்கல்லினையும் நாட்டி வைத்தனர்.

பின்னர் நாட்டிற்கும் அராங்கத்திற்கும் பிரதமருக்கும் நல்லாசி வேண்டிய துவா பிரார்த்தனையை பேசி இமாம் மௌலவி எம்.ஜி.சாதிக் நடாத்தி வைத்தார்.

நிகழ்வில் சமூக மட்ட தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு திருமலையில் விசேட பூஜை

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

மாண்புமிகு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய 76 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றது.

நேற்று (18) திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வர ஆலயத்தில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவின் வழிகாட்டலில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றது.

நாட்டுக்கும், மக்களுக்கும், மாண்புமிகு பிரதம மந்திரி உட்பட அனைவருக்கும் ஆசி வேண்டி நடைபெற்ற இப்பூஜை வழிபாடுகளில் மாவட்ட அரசாங்க அதிபர் , மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே. எஸ்.குருகுலசூரிய, ஏனைய உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் ஆலம்குளம் உள்ளக வீதிகள் அபிவிருத்தி

## அபிவிருத்தி பணிகளை எஸ்.எம்.சபீஸ் ஆரம்பித்து வைத்தார்

**மாளிகைக்காடு நிருபர்**

கிராமிய வீதி மற்றும் அத்தியவசிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதியொதுக்கீட்டில் புனரமைப்பு செய்யப்படவுள்ள அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட ஆலம்குள வீதிகளை அபிவிருத்தி செய்யும் உத்தியோகபூர்வ அங்குராப்பண வைபகம் இன்று அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் சம்மேளன தலைவரும், அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுமார் 50 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் நடைபெறவுள்ள இந்த அபிவிருத்தி திட்ட ஆரம்ப நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் ஐ. எச்.அப்துல் வஹாப், மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகரவின் இணைப்பாளர் அப்துல் காதர் றிசாத், அப்பகுதி கிராம நிலதாரி பள்ளிவாசல்களின் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



# மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரங்களுடன் நால்வர் கைது



**(அ .அச்சுதன் )**

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீத்தான்தட்டி காட்டுப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு உழவு இயந்திரங்களை நேற்று புதன்கிழமை (17) மாலை வேளையில் மூதூர் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்தோடு சந்தேக நபர்கள் நால்வரை கைது செய்து பொலிஸ் பிணையில் விடுதலை செய்துள்ளதோடு நாளை வெள்ளிக்கிழமை (19) மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் மூதூர் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மணல் அகழ்வு அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை மீறி வேறொரு இடத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்டமினாலையே கைது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த காட்டுப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக மூதூர் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பினை மேற்கொண்டபோது உழவு இயந்திரங்களுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மூதூரில் சதோச திறந்து வைப்பு







**(அ . அச்சுதன் )**

மூதூர் நகர் பகுதியில் லங்கா சதோசவின் புதிய கிளை நேற்று வியாழக்கிழமை (18) காலை திறந்து உத்தியோகபூர்வமாக வைக்கப்பட்டது. இதனை முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரல அவர்களின் இணைப்பாளருமான காமினிஹேவா வித்தாரன பிரதம அதிதியாக கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

மூதூரில் ஏற்கனவே இருந்த லங்கா சதோசகிளை இரண்டு வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்டது. இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் இவ் புதிய கிளையானது மூதூர் நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் லங்கா சதோசவின் சிரேஷ்ட முகாமையாளர் ஆர்.கே.ரணசிங்க, மூதூர் பொலிஸ் நிலையப் பொறுதிகாரி இந்திக்க சோமநுவர, பொதுஜ பெரமுனவின் மூதூர் அமைப்பாளர் எம்.முபாரக், மதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வறிய மக்களுக்கு உலருணவு பொருட்கள் வழங்கி வைப்பு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

ஸ்ரீசத்ய சாயி வித்யாநிலைய சர்வதேசப் பாடசாலையும் ஸ்ரீ சத்யாநிலையமும் இணைந்து தலவாக்கலை பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உலருணவு பொருட்கள், புத்தாடைகள், இனிப்புக்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு தலவாக்கலை ஸ்ரீ சத்யா நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது சாயி நிலையத்தின் தலைவர் ஸ்ரீமதி கமலநாயகி, நிலையப் பொதுச் செயலாளர் டாக்டர் வே. கருணைராசன் மற்றும் ஸ்ரீ சத்ய சாயி வித்யா நிலைய சர்வதேசப் பாடசாலையின் அதிபர் ஸ்ரீமதி.உமாதர்சினி ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம்





**(ந.குகதர்சன்)**

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக சமூக சேவை திணைக்களம், கோறளைப்பற்று மத்தி ஒளிமயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு, நவஜீவனா நிறுவனம் மற்றும் இலங்கை குடும்ப திட்டமிடல் சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி ஒளிமயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் எம்.எம்.றபீக் தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மனநல மருந்துவர் வைத்தியர் பி.யூடிரமேஸ் ஜெயகுமார், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஆர். எஸ்.றுசைர், கோறளைப்பற்று மத்தி பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.நசீர், இலங்கை குடும்ப திட்டமிடல் சங்க மாவட்ட முகாமையாளர் எஸ்.எச். இம்தியாஸ், கோறளைப்பற்று மத்தி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக குடும்பநல உத்தியோகத்தர், அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கான உடல் ஆரோக்கியம் குறித்;து குருதிப் பரிசோதனை, தொற்றா நோய்க்கான பரிசோதனை, மாற்றுத்திறனாளிகளுக்கான உடல் திறன் பரிசோதனை, மருத்துவ ஆலோசனை உட்பட்ட பல பரிசோதனைகள் இடம்பெற்றது.

# தென்னமரவாடி கிராமத்தில் சுகாதார நிலையம்





**(கதிரவன்)**

சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பினால் திருகோணமலை தென்னமரவாடி கிராமத்தில் சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் திறந்து வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை 2021.11.18 காலை நடைபெற்றது.

IMHO அமைப்பின் பிரதானி மருத்துவர் சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன்தர்சன பாண்டிகொரள்ள பிரதம அதிதியாக கலந்து இதனைத் திறந்து வைத்தார்.

திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி நோயல் இமானுவல், குச்சவெளி பிரதேச செயலாளர் குணநாதன், திருகோணமலை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பிறேமானந்த் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

IMHO அமைப்பு 2004ம் வருடம் ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட இனம் மதம் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு சமுக நிறுவனமாகும். இது 2010ம் வருடம் பிரித்தானியாவிலும் கனடாவிலும் தோற்றுவிக்கப்பட்டது. பிரித்தானியாவில் உள்ள பரோபகாரிகளின் நிதி பங்களிப்பில் 8.8 மில்லியன் நிதியில் இந்த சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ தாதி ஒருவர் 24 மணி நேரமும் சேவையாற்ற கூடியவாறும் வாரத்தில் குறைந்தது ஒரு நாளாவது மருத்துவர் ஒருவர் இங்கு வருகை தந்து சிகிற்சை வழங்க கூடியதாக தாங்கள் இதனை செயற்படுத்த உள்ளதாக அமைப்பினர் தெரிவித்தனர்.

அயற்கிராமத்தை சேர்ந்தவர்களும் இங்கு வந்து சிகிற்சை பெறக்கூடிய வாய்ப்புகளும் வழங்கப்படுவதுடன் வைத்திய சாலைகளில் உள்ளதைப் போன்று பரிசோதனை உபகரணங்களையும் வழங்க உள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள். நிகழ்வில் கலந்து கொண்ட பொதும்கள் ஒவ்வொருவருக்கும் லண்டனில் இருந்து வருகை தந்த அமைப்பின் உறுப்பினர்களால் ஆடைகளும் மதிய உணவும் வழங்கப்பட்டது.

# வரப்புயர மரநடுகை திட்டத்தில் மன்னாருக்கு 500 தென்னங் கன்றுகள் பயனாளிகளுக்கு விநியோகம்







**( வாஸ் கூஞ்ஞ)**

சூரிச் நகரில் உள்ள சிவன் கோயில் அன்பே சிவம் அமைப்பினரல் வரப்புயர மரநடுகை திட்டத்தின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்திற்கு 500 தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த தென்னங்கன்றுகள் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அடம்பன் மினுக்கன் பாப்பாமோட்டை போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் ஆரம்ப நிகழ்வாக புதன்கிழமை (17.11.2021) நடைபெற்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் சி.டி. அரவிந்த ராஜ் அவர்கள் கலந்து கொண்டு பயனடளிகளுக்கான தென்னங்கன்றுகளை வழங்கி வைத்தடர்.

இந்த மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வுக்கான ஏற்பாட்டு உதவிகளை மன்னார் றோட்டரி கழக உறுப்பினர்கள் செயற்படுத்தியிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கிவைப்பு




(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ் )

அல் ஹிக்மா பவுண்டேஷனின் அனுசரணையுடன் உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது

நோற்று (16) அல் ஹிக்மாபவுண்டேஷன் அலுவலகத்தில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உப-தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்களின் தலைமையில் நடைபெற்றிருந்தது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபைக்குட்பட்ட வெள்ளைமணல் கிராமத்தில் இயங்கிவரும்

அல் ஹிக்மா பவுண்டேஷன் மூலம் கிண்ணியா மற்றும் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் சுமார் 50து குடும்பங்களுக்கு இவ்வாறு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது

அல் ஹிக்மா பவுண்டேஷன் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் மக்களின் நலனுக்கான பல வேலைத்திட்டங்களை செய்து வருகின்றனர் அவர்களின் சேவைகள் மென்மேலும் சிறக்க வேண்டும் என இன் நிகழ்வில் கலந்து கொண்ட கௌரவ நௌபர் அவர்களினால் வாழ்த்துகள் தொரிவிக்க பட்டத்துடன்

மேலும் இந்நிகழ்வில் அல் ஹிக்மா



பவுண்டேஷன் பணிப்பாளர் மதிப்புக்குரிய அஷ்ஷெய்க் முகம்மது அப்பாஸ் இபாதுள்ளா,

நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்குடா கல்வி வலயத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கிகள் வழங்கிவைப்பு

(எஸ்.சபேசன்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்குடா கல்வி வலயத்தில் உள்ளதெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்குகிருமித் தொற்று நீக்கிகள் வழங்கிவைப்பு.

ROTARY CLUB OF COLOMBO MIDCITY-யின் அனுசரணையில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில்புதன்கிழமை (17) சந்திவெளி சித்திவிநாயகர்வித்தியாலய அதிபர் ம.சிவசுந்தரம் தலைமையில் கோறளைப்பற்று கோட்டக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட 10 பாடசாலைகளுக்கு சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான கிருமிதொற்று நீக்கிகள் சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் வழங்கிவைக்கப்பட்டன.

இதில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்குமாகாண இணைப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளருமாகிய பொன்னுத்துரை உதயரூபன் அவர்கள்கலந்து கொண்டதுடன் கோறளைப்பற்று கோட்டக் கல்வி அலுவலகத்திற்குரிய தெரிவு செய்யப்பட்டபாடசாலைகளுக்கு தொற்று நீக்கிகள் அடங்கிய பொதியும் வழங்கி வைக்கப்பட்டன மேலும் மட்டக்களப்பு மேற்கு வலய,மண்முனைமேற்கு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட 30 பாடசாலைகளுக்கு கடந்த திங்கட்கிழமை 4




லட்சம் ரூபாய் பெறுமதியான கிருமித் தொற்று நீக்கிகள் வழங்கிவைக்கப்பட்டதாகவும் மட்டக்களப்பு கல்வி வலய ஏறாவூர் பற்று கோட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கிகள் வழங்கிவைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டுநகரில் வர்த்தக நிலையங்கள் சுற்றிவவளைப்பு





(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் மனித பாவனைக்குதவாத உணவுந் பொருட்களை விற்பனை செய்த 4 வர்த்தக நிலையங்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் அவ்வர்த்தக நிலையங்களிலிருந்து மனித பாவனக்கு உதவாத 100 கிலோ உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி தாதிய பயிற்சி கல்லூரி மாணவர்களுடன் இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இத்தேடுதல் நடவடிக்கையில் இன்று காலை முதல் ஈடுபட்டனர்.

# சாய்ந்தமருது அல் – ஹிலால் வித்தியாலயத்தின் சேவை நலன் பாரட்டு விழா



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய, சாய்ந்தமருது கல்விக்கோட்டத்தின் கமு/ கமு/அல் - ஹிலால் வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர் திருமதி.எச்.ஏ.லத்திப், அல் - ஹிலால் வித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்று அக்கரைப்பற்று மத்திய தேசிய பாடசாலையில் அதிபராக கடமை புரியும் ஏ.பி. முஜீன் அவர்களையும் பாராட்டி கௌரவிக்கின்ற நிகழ்வு பாடசாலையின் அதிபர் யு.எல்.நஸார் தலைமையில் கல்லூரியின் கேட் போர் கூடத்தில் புதன் கிழமை இடம் பெற்றது.

இந்நிகழ்வின் விசேட அதிதிகளாக பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளரும், கல்முனை கல்வி மாவட்ட பிரதம பொறியியலாளருமான ஏ.எம்.சாஹிர், கல்முனை வலய கல்வி அலுவலகத்தின் பிரதம கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ், கல்முனை கல்வி வலயத்தின் பிரதி கல்வி பணிப்பாளர்கள், உதவி கல்வி பணிப்பாளர்கள், மட்டக்களப்பு அரச ஹோமியோபதி வைத்தியசாலையின் வைத்தியர், டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசலையின் உடல் நல நடமாடும் சேவை நிலையத்தின் பணிப்பளார் டாக்டர் எம்.ஏ.எம். முனீர் பாடசலை பிரதி அதிபர் றிப்கா அன்சார், உதவி அதிபர் எம்.எச்.நுஸ்ரத் பேகம், பகுத்தலைவர்கள், ஆசிரியர், ஆசிரியைகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# வீதி அபிவிருத்தி அதிகாரபை பிரதம பொறியியலாளராக தாமோதரம் சிவசுப்ரமணியம் பதவி உயர்வு

(நூருல் ஹுதா உமர்)

வீதி அபிவிருத்தி அதிகாரபையின் அக்கரைபற்று பிரதான பொறியியலாளர் அலுவலகத்தின் பிரதம பொறியியலாளராக எந்திரி தாமோதரம் சிவசுப்ரமணியம் பதவி உயர்வு பெற்று மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் எம்.பி. அலியார் அவர்களின் முன்னிலையில் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கடந்த 1997.01.13 திகதி வீதி அபிவிருத்தி அதிகாரபையில் இணைந்து இரத்தினபுரி, மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை மற்றும் கொழும்பு காரியாலயங்களில் பொறியியலாளராக கடமையாற்றியுள்ளார். மேலும் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் நிறைவேற்று பொறியியலாளராக கடந்த 2019 ஜுனிருந்து இம் மாதம் 16ம் திகதிவரை கடமையாற்றியுள்ளார்.

வீரமுனையில் சாதாரண தரம் வரை கல்விபயின்ற இவர் தனது உயர்தரத்தை சம்மாந்துறை மத்திய கல்லுரியில் கற்று பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்க்கு தெரிவு செய்யப்பட்டார். அங்கு தனது பொறியியலாளர் பட்டத்தை பெற்றுக் கொண்ட இவர் சம்மாந்துறை, வீரமுனையை பிறப்பிடமாகவும் காலம் சென்ற அதிபர் தாமோதரம் மற்றும் செல்லம்மா



தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் காரைதீவைச் சேர்ந்த முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஜீவாராணியின் கணவரும் ஆவார்.

# மூதூரில் டெங்கை ஒழிக்க சிரமதான நிகழ்வு





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

தற்போது நாடளாவிய ரீதியாக ஏற்பட்டிருக்கும் டெங்கு பரவல் அச்சுறுத்தலை தடுக்கும் வகையில் மூதூரில் சிரமதான நிகழ்வு இன்று (18) இடம் பெற்றது.

மூதூர் பிரதேச செயலகம் மற்றும் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மூதூர் பிரதேச சபை, பொலிஸார் ஆகியோரும் இணைந்து இன்றைய டெங்கு சிரமதான நிகழ்வை மேற்கொண்டனர்.

# காரைதீவு பிரதேசசபைக்கு மாத்தளை மேயர் விஜயம்



(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேசசபைக்கு மாத்தளை மாநகர மேயர் சந்தனம் பிரகாஷ் நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் அவரையும் அவருடன் வருகைதந்த மாநகரசபை உறுப்பினர்களான ரி.எஸ்.மோகன் சந்திரசேகரம் ராஜன் மற்றும் அவர்களது குடும்பத்தினரையும் மாலைசூட்டி வரவேற்றார்.

தவிசாளர் அலுவலகத்தில் அபிவிருத்தி மற்றும் செயற்றிட்டங்கள் தொடர்பில் சிநேகபூர்வமான கலந்துரையாடல் நடைபெற்றது.

மாத்தளை மாநகரசபை முன்னெடுத்துவரும் முற்போக்கு மக்கள் நலத்திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.எதிர்காலத்தில் காரைதீவுப்பிரதேசத்திலும் அவற்றை அமுல்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.



பிரதேசசபைச் செயலாளர் அ.சுந்தரகுமார் ,சுபா, தினேஸ் உள்ளிட்ட சபை உத்தியோகத்தர்களும் சமுகமளித்திருந்தனர்.

# காரைதீவில் கார்ப்பட் வீதி அமைப்பு

காரைதீவு பிரதானவீதி ஒருவழிப்பாதையாக விஸ்தரிக்கப்படுவதனையொட்டி எஞ்சிய பகுதிக்கு கார்ப்பட் இடும் பணியினை வீதிஅபிவிருத்திஅதிகாரசபையினர் மேற்கொண்டுள்ளனர்.ஒருவழிப்பாதையாக பிரிக்கப்பட்டு பல மாதங்களுக்கு பின்னர் இவ்எஞ்சிய வீதி தற்போது கார்ப்பட் இடப்படுவதனைக்காணலாம்.

(படங்கள் காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)






# மொரவெவ பிரதேசத்தில் காட்டு யானைகள் அட்டகாசம் ; வீடுகள் உட்பட விதை நெல்களும் நாசம்





**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை மொரவெவ முதலாம் வாய்க்கால் பிரதேசத்தில் காட்டுயானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பிரதேச வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நேற்று (17) இரவு முதலாம் வாய்க்கால் பிரதேசத்தில் குடியிருப்புக்குள் புகுந்து அட்டகாசம் செய்துள்ளது

நேற்று இவ்வாறு குடியிருப்புக்குள் புகுந்த மூன்று காட்டு யானைகள் வீடுகளையும் சேதம் செய்து விதை நெல்லுக்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகளை நாசம் செய்து வீட்டின் இலத்திரனியல் உபகரணம் உட்பட விவசாய உபகரணங்களையும் நாசம் செய்துள்ளது.இவ்வாறு இப்பிரதேசத்தில் நாளுக்கு நாள் மனிதன் யானை மோதல் அதிகரித்த வண்ணம் உள்ளதகவும் இப்பிரதேசத்தில் மக்கள் குடியிருப்பதட்க்கும் பெரும் அச்சம் கொள்வதாகவும் உரிய அதிகாரிகள் இதனை கண்டுகொள்ளாமல் இருப்பது பெரிதும் கவலையளிப்பதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.நாட்டில் ஏற்ப்பட்டுள்ள இவ் அசாதாரண சூழ்நிலையில் இவ்வாறு விதைப்பதட்காக வைத்திருந்த விதை நெல் உட்பட வீடுகளையும் இவ் காட்டுயானைகள் இவ்வாறு சேதப்படுத்துவதாவது விசாயிகளுக்கு எதிர்காலத்தில் பெரும் சவாலாக அமையும் எனவும்

முதலாம் வாய்க்கால் பிரதேசத்தில் அரசாங்கத்தினால் யானை வேலிகள் அமைத்திருந்தாலும் அவை உரிய வகையில் பராமரிக்க படாமையினால் காட்டு யானைகள் யானை வெளியினை தகர்த்திக்கொண்டு குடியிருப்புக்குள் நுழைவதாகவும் இவ்வாறு நுழைந்த யானைகளை விரட்டுவதட்கு வன இலாக்கா அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினாலும் அதிகாரிகள் விரைவாக செயட்படுவத்தில்லை எனவும் பிரதேச வாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.எனவே விவசாயத்தினை ஜீவனோபாயமாக கொண்டுள்ள மொரவெவ முதலாம் வாய்க்கால் பிரதேச மக்களின் விவசாயத்தினை பாதுகாக்க உரிய அதிகாரிகள் இவ்வாறு அரசாங்கத்தினால் பல இலட்சம் சிலவு செய்து அமைக்கப்பட்ட யானை வேலிகளை உரிய முறையில் பராமரித்து காட்டு யானைகளிடமிருந்து எமது விவசாயத்தினையும்,உடமைகள் மற்றும் உயிர்களையும் பாதுகாக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# பிரதமரின் 76 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு விசேட துஆப்பிரார்த்தனை






**(பாறுக் ஷிஹான்)**

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் 76ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நாட்டின் பிரதமரினதும் மக்களதும் நலன் வேண்டிய சர்வமத சிறப்புப் பிரார்த்தனை வழிபாடுகள் நாடுபூராகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இன்று(18) அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேசத்தில் உள்ள ஜாமியுத் தைய்யார் ஜும்மா பள்ளிவாசலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேச செயற்குழு தலைவர் இர்ஷாத் அதாப்பின் ஏற்பாட்டில் கட்சியின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அஹமட் புர்க்கானின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்படி ஜும்மா பள்ளிவாசலில் ஒன்று கூடிய பெரமுன கட்சியின் ஆதரவாளர்கள் மௌலவிமார்கள் இணைந்து துஆ பிரார்த்தனை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

மேலும் பிரதமரின் பிறந்த நாளில் குறித்த பள்ளிவாசலில் பயன்தரு மரங்கள் நடுகை செய்யப்பட்டதுடன் நிகழ்வில் கலந்து கொண்ட மௌலவிமார்களுக்கு பரிசு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது.இதே வேளை பிரதமரின் நலன் வேண்டிய இப்பிரார்த்தனைகளை ஏனைய இடங்களிலும் முன்னெடுப்பதற்கும் ஏற்பாட்டு செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அஹமட் புர்க்கான் தெரிவித்துள்ளார்.

# திருக்கோவில் தாண்டியடி கிராமத்தில் கைத்தறி நெசவு நிலையம் திறந்து வைப்பு

**(திருக்கோவில் நிருபர் -எஸ்.கார்த்திகேசு)**

கிழக்கு மாகாண கிராமியத் தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரனையுடன் திருக்கோவில் பிரதேச செயலகத்துடன் இணைந்த அம்பாரை மாவட்ட கிராமியத் தொழிற்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் பிரதேசத்தில் தாண்டியடி கிராமத்தில் கைத்தறி நெசவு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு அம்பாரை மாவட்ட கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி கே.எம்.கே.எஸ்.குலதுங்க தலைமையில் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வில் அம்மாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நெசவு நிலையத்தை இன்று திறந்து வைத்திருந்தார்.

இவ் நெசவு நிலையமானது சுமார் 6 இலட்சம் பெறுமதியான நிதி செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 10க்கும் மேற்பட்ட யுவதிகள் பயிற்சிக்காக இணைக்கப்பட்டுள்ளதோடு பயிற்சிகளை திறமையாக நிறைவு செய்வோறுக்கு தங்களின் வீடுகளில் இவ் நெசவு தொழிலை முன்னெடுப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அதிகாரிகளினால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் உரையாற்றுகையில் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் கனவு உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தி அதன் ஊடாக நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப வேண்டும் என்பதாகும்.

அவருடைய இந்த கனவை நாட்டு மக்களாகிய நாம் அனைவரும் சிந்தித்து அவருடைய துரநோக்குடனான கனவு நனவாகும் வகையில் ஒவ்வொரு தனி நபரும் செயற்பட வேண்டும் அரசின் மானியங்களை தொடர்ந்து எதிபார்க்காது நிலையான சுயதொழில் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டு இருந்ததுடன் திருக்கோவில் பிரதேச செயலாளரும் இங்கு உரையாற்றி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



இந்நிகழ்வில் அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பளார் எம்.அனோஜா கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# மாகாண சபையினை கைப்பற்றியதும் கிழக்கு மாகாணம் அதிக சுற்றுலாப்பயணிகள் வரும் இடமாக மாற்றப்படும் – மதிமேனன்!





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனினால் மட்/பட்/ ஒந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் மகாவித்தியாலயத்திற்கு மனையியல் பாடத்திற்காக மணவர்கள் பயிற்சிக்கான குளிர்சாதனப்பெட்டி, தையல் இயந்திரம் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மக்களது மக்களின் கோரிக்கைக்கு அமைவாக இவை வழங்கி வைக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் உத்தியோகபூர்வ செயலாளரும், இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் முகாமையாளருமான மதிமேனனினால் இவை வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், ஒந்தாச்சிமடம் அழகிய கடற்கரை உள்ள பிரதேசம். இதனை அழகுபடுத்துவதற்கான இரண்டு, மூன்று திட்ட முன்மொழிவுகளை எங்களது நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மத்திய அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையினை கைப்பற்றியதும், இந்த விடயங்களை நாம் செய்து காட்டுவோம். குறித்த பகுதியினை சிறந்த சுற்றுத்தலமாக மாற்றுவோம். கிழக்கு மாகாணம் அதிக சுற்றுலாப்பயணிகள் வரும் இடமாக மாற்றப்படும்.அதேபோன்று மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் போது அதற்கான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மோட்டார் சைக்கிள் திருடிய இளைஞனின் பெற்றோருக்கு பாராட்டுக்கள்!

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

இளைஞன் ஒருவன் திருடிச் சென்ற மோட்டார் சைக்கிளை அவனது பெற்றோர் உரிய நபரிடம் ஒப்படைத்துள்ள சம்பவமொன்று இன்று (18) இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு இன்று காலை பல்சர் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு பொருட்கள் கொள்வனவு செய்துள்ளார்.

அதனை அவதானித்துக் கொண்டிருந்த இளைஞன் மோட்டார் சைக்கிளை சூசகமாக திருடிக் கொண்டு அவனது வீட்டில் மறைத்து வைத்துள்ளான்.

மோட்டார் சைக்கிளை கண்டு கொண்ட பெற்றோர். இளைஞனிடம் விசாரணைகளை மேற்கொண்டு மோட்டார் சைக்கிளை வாழைச்சேனை பொலிஸாரின் முன்னிலையில் உரிய நபரிடம் ஒப்படைத்துள்ளனர்.

திருட்டுச் சம்பவத்தை தடுக்க பெற்றோர் எடுத்துக் கொண்ட இந்த செயற்பாட்டுக்கு மோட்டார் சைக்கிள் உரிமையாளரும், பொலிஸாரும் திருட்டுச்சம்பவத்தை செய்த இளைஞனின் பெற்றோருக்கு பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் அதிபர்களுக்கான 5நாள் வாண்மைவிருத்திச் செயலமர்வு ஆரம்பம்!

## கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் ஏற்பாடு



**(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த தரம்பெற்ற அதிபர்களுக்கான ஐந்துநாள் வாண்மைவிருத்திச் செயலமர்வு ஆரம்பமாயிருக்கின்றது.கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் ஏற்பாட்டில் இச் செயலமர்வு நடைபெற்றுவருகிறது.

முதலாம் கட்டமாக 75 அதிபர்களுக்கான செயலமர்வு மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சர்வோதய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றுவருகின்றது.

திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை கல்முனை மாவட்டங்களைச்சேர்ந்த 75அதிபர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்திடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

நீண்டகாலமாக பாடசாலை முகாமைத்துவத்தில் இற்றைப்படுத்தப்பட்ட நடைமுறைகள் சுற்றுநிருபங்கள் தொடர்பாக அதிபர்கள் மத்தியில் தெளிவின்மை நிலவுவது அவதானிக்கப்பட்டதையடுத்து இத்தகைய செயலமர்வின் முக்கியத்துவம் உணரப்பட்டது.கிழக்கு மாகாணபாடசாலைகளில் கடமையாற்றும் தரம்பெற்ற அதிபர்கள் கட்டம்கட்டமாக இப்பயிற்சிநெறிக்கு அழைக்கப்படுவார்கள். முதற்கட்டமாக 75பேர் தற்சமயம் சத்துருக்கொண்டானில் பயிற்சிபெற்றுவருகின்றனர். எதிர்வரும் ஞாயிறன்று அது நிறைவடையும்.

அடுத்த இரண்டு அதிபர் அணிகளுக்கான பயிற்சிநெறிகள் அடுத்தடுத்தவாரங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# விதவைகள்,மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு உதவி

**(அ . அச்சுதன் )**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அம்மன்நகர்,கணேசபுரம்,கடற்கரைச்சேனை,சிறினிவாசபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பத்தினர் உள்ளடங்களாக சுமார் 50 குடும்பங்களுக்கு செவ்வாய்கிழமை (16) உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவின் கணேசபுரத்தில் செயற்படும் திருமுருகன் மக்கள் ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கிணங்க சர்வோதயம் அமைப்பினால் சுமார் 3500 ரூபாய் பெறுமதியான அரிசி,மா,பருப்பு,சீனி,சோயா,தேயிலை,உப்பு உள்ளடங்கிய 50 பொதிகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.



இந்நிகழ்வில் சர்வோதயம் அமைப்பின் வடகிழக்கு மாகாண பணிப்பாளர் திரு.வேல்முருகன் தேவராஜ், திருமுருகன் மக்கள் ஒன்றியத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு.இராசமாணிக்கம் ஜீவேந்திரன் , செயலாளர் திரு.சசிதரன் பானுதேவன் உள்ளிட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது .

# கல்முனை மாநகரசபையின் பாரபட்சமான நிலை நீடித்தால் தனியான நகரசபைக்காக நாங்களும் போராட வேண்டிய நிலையேற்படும்

## மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன்

**(மாளிகைக்காடு நிருபர்)**

முஸ்லிங்களும், தமிழர்களும் ஒற்றுமையாக வாழும் கல்முனை மாநகரில் மாநகர முதல்வரின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேள்வியெழுப்பினால் ஒலி வாங்கியையும் உடைத்தெறிந்துவிட்டு சபையிலிருந்து வெளியேறி சென்றுவிடுகிறார். இந்த நிலை நீடித்தால் கல்முனை பிரதேச செயலக தரமுயர்த்தல் போராட்டத்திற்கு மேலதிகமாக நாங்களும் நகரசபைக்கான கோரிக்கையை முன்னிறுத்தி போராடவேண்டிய நிலையேற்படும் என கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

புதன்கிழமை (17) மாலை கல்முனை தனியார் விடுதியில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கல்முனை மாநகரசபையினால் தடுத்து நிறுத்தப்படும் அபிவிருத்திகள் தொடர்பிலான விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளது. தனிப்பட்டவர்களுடன் கொண்ட கோபத்தின் காரணமாக கல்முனைக்கு வரும் அபிவிருத்திகளை தடுத்துக்கொண்டிருக்கிறார். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்காக கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளரினால் கல்முனை 12ஆம் வட்டாரத்தில் உள்ள பொதுமயான சுற்றுமதில் அமைக்க 13 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு பிரதேச செயலகத்தினால் அதற்கான முன்னெடுப்புக்கள் செய்யப்பட்டுவரும் சூழ்நிலையில் ஏழு மாதங்கள் கடந்துள்ள நிலையில் கல்முனை முதல்வர் மற்றும் ஆணையாளர் அதற்கான அனுமதிகளை வழங்காமல் தமக்கு சாதகமானவர்களின் அரசியல் இருப்புக்காக இழுத்தடிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அரச அதி



காரியான ஆணையாளர் அரசியல்வாதியை போன்று செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது. கல்முனை தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தியை விரும்பாதவர்களுக்கு கல்முனை முதல்வர் சாதகமாக செயற்படுகிறார்.

அது மட்டுமின்றி மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் பாண்டிருப்பு பிரதேசத்தில் இந்த வார ஆரம்பத்தில் வடிகான்களை துப்பரவு செய்யும் பணியில் கல்முனை மாநகர சுகாதார ஊழியர்களும், இயந்திரமும் வேலை செய்து கொண்டிருந்த போது கல்முனை பொலிஸில் கடமையாற்றும் ஒரு உப பொலிஸ் பரிசோதகரும், அவருடன் வந்த இன்னும் சில பொலிஸாரும் மதுபோதையில் தடுமாறியவர்களாக வாக்குவாதப்பட்டு அந்த ஊழியர்களை பொய்யான வழக்கை பதிவு செய்து கைதுசெய்வேன் என்று மிரட்டி தாக்க முற்பட்டார்கள். அப்போது அந்த வழியால் வந்த நான் இது தொடர்பில் தலையிட்டு நியாயம் கேட்டேன். இன்றுவரை இது தொடர்பில் கல்முனை முதல்வரோ அல்லது அவருடன் இணைந்திருப்பவர்களோ, மாநகர நிர்வாகிகளோ அந்த சுகாதார ஊழியர்களுக்கு ஆதரவாக குரல்கொடுக்க முன்வராமல் மௌனியாக இருக்கிறார்கள். மட்டுமின்றி அந்த அப்பாவி சுகாதார ஊழியர்களையும் சிலர் அதிகாரத்தொனியில் மிரட்டுகிறார்கள். இது தொடர்பில் நாங்கள் மிகவும் கவலையுற்றுள்ளோம்.

பொதுமயான சுற்றுமதில் அமைக்கும் பணிகளை கிராம அபிவிருத்தி சங்கம் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு ஆரம்பித்துள்ள போது மாநகர சபையினால் தடுத்து நிறுத்தப்பட்ட விடயம் தொடர்பில் கடந்த சபை அமர்வில் நான் கேள்வியெழுப்பினேன். அப்போது முதல்வர் அவரது ஒலி வாங்கியையும் உடைத்தெறிந்துவிட்டு சபையிலிருந்து வெளியேறி சென்றுவிட்டார். இந்த நிலை நீடித்தால் பிரதேச செயலக போராட்டத்திற்கு மேலதிகமாக நாங்களும் எதிர்காலத்தில் எங்களுக்கான தனியான நகரசபைக்கான கோரிக்கையை முன்னிறுத்தி போராடவேண்டிய நிலையேற்படும் என்றார்.

# தேரர் தொடர்பில் மட்டக்களப்பு மக்களும், அதிகாரிகளும் இறுதி முடிவெடுக்கவேண்டிய நிலையேற்படும்

## துரைரேட்னம் எச்சரிக்கை

அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தொடர்பில் மட்டக்களப்பு மக்களும் அதிகாரிகளும் இறுதி முடிவெடுக்க வேண்டிய நிலையேற்படும் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பத்மநாபா மன்றத்தின் தலைவருமான இரா.துரைரெட்னம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதிகாரிகளை தொடர்ச்சியாக அச்சுறுத்தும் அம்பிட்டிய சுமனரத்ன தேரரின் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பௌத்த சாசன அமைச்சு முறையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தொடர்பில் மட்டக்களப்பு மக்களும், அதிகாரிகளும் இறுதி முடிவெடுக்க வேண்டிய நிலையேற்படும் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பத்மநாபா மன்றத்தின் தலைவருமான இரா.துரைரெட்னம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் பௌத்த மதகுருவொருவரால் கடந்த 15ஆம் திகதி அரசாங்க உத்தியோகத்தர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைத்தனமான செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றேன். குறித்த பௌத்த குரு ஒருவருட காலத்திற்குள் இலுப்படிச்சேனை, பிள்ளையாரடி பகுதியில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் கடந்த காலத்தில் மாவட்ட செயலகம், பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளருக்கு எதிராகவும் கெவிழியாமடு பகுதியில் கிராம சேவையாளருக்கு எதிராகவும் கடந்த 15ஆம் திகதி பட்டிப்பளை பிரதேச செயலாளருக்கு எதிராகவும் தொடர்ச்சியான முறையற்ற வகையில் வன்முறைத்தனமாக செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

குறித்த மதகுருவின் செயற்பாடானது பௌத்த மதகுருவின் கொள்கைக்கு எதிரான வகையில் இவரின் செயற்பாடுகள் இடம்பெற்று வரும் நிலையில் இலங்கை அரசாங்கம் ஒரு பார்வையாளர் போன்று இவரின் செயற்பாட்டை பார்த்து வருகின்றது. இந்த மதகுருவினை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வெறுக்கின்றார்கள். மதகுருவுக்குரிய மனிதாபிமானமோ, கொள்கையோ இவரிடமில்லை. இவர் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பௌத்த சாசன அமைச்சு முறையான நடவடிக்கையினை எடுத்து சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால் தேரர் தொடர்பில் மட்டக்களப்பு மக்களும் அதிகாரிகளும் இறுதி முடிவெடுக்கவேண்டிய நிலையேற்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட மக்களின் உரப்பிரச்சினை தொடர்பிலும் அவர் இங்கு கருத்து வெளியிட்டார்.

கடந்த காலங்களில் இயற்கை விவசாயத்தினை மேற்கொண்ட மட்டக்களப்பு மாவட்ட மக்கள் செயற்கை உரத்தினை விவசாயத்திற்கு பயன்படுத்தியதற்கான பொறுப்பினை இந்த நாட்டின் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். இயற்கை உரத்தினையும் இலை குழையையும் கொண்டு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த மட்டக்களப்பு விவசாயிகளை இரசாயண உரத்திற்கு மாற்றியது இந்த அரசாங்கமேயாகும். இந்த அரசாங்கத்தின் தேசிய ரீதியான கொள்கைகளில் பல தவறுகள் இருக்கின்றன. மாறி மாறிவரும் அரசாங்கங்கள் விவசாயம் தொடர்பான கொள்கைகளை மாற்றுவதன் ஊடாக பாதிக்கப்படுவது இந்த மட்டக்களப்பு மாவட்ட மக்கள் என்பதை இந்த அரசாங்கம் மறந்துவிடக்கூடாது.

இயற்கை உரத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்ப்பு இல்லை. ஆனால் முழுமையாக இயற்கை உரத்தினை மட்டுமே பாவிக்க வேண்டும் என்ற அழுத்தத்திற்கே இந்த மாவட்ட விவசாயிகள் எதிர்ப்புகளை தெரிவித்துவருகின்றனர். படிப்படியாகவே இந்த செயற்பாட்டினை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். உடனடியாக மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு இரசாயண உரத்தினை வழங்க அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாட்டில் அரசாங்க உத்தியோகத்தர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றனர். கோவிட் அச்சுறுத்தல், விலையேற்றம் என பல்வேறு நெருக்கடிகளினால் அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அண்மையில் வெளியிடப்பட்ட வரவு செலவு திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு எந்தவித ஒதுக்கீடும் செய்யப்படாதது இந்த அரசாங்கத்தின் மோசமான ஏமாற்று செயற்பாடாகவே பார்க்கவேண்டியுள்ளது.

வரவு செலவு திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு நிதியொதுக்காத காரணத்திற்காக வடகிழக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

எதிர்வரும் காலத்தில் குறைநிரப்பு பிரேரணை ஊடாக வேணும் நிதிகளை அரசாங்க ஊழியர்களுக்கு ஒதுக்கும் வாய்ப்புகள் உள்ள நிலையில் அதற்கான செயல் வடிவத்தை கொடுக்க ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டும். வரவு செலவுத்திட்டம் ஊடாக புரியாத விடயங்களை நிதியமைச்சர் வெளியிட்டுள்ளார். அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒய்வு பெறும் வயதெல்லை 65வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது இலங்கையில் தொழில்வாய்ப்பினை எதிர்பார்க்கும் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்பினை இல்லாமல் செய்யும் வயதெல்லை ஒய்வு பெறும் வயதெல்லை 65 வரையில் அதிகரிக்கப்பட்ட விடயத்தில் அரசாங்கம் மீள் பரிசீலனை செய்து இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு வழியேற்படுத்த வேண்டும். அத்துடன் அமைச்சர் ஒருவர் அரசாங்க உத்தியோகத்தர்களை நலினப்படுத்தக்கூடியவாறு தெரிவித்த கருத்து அரசாங்க உத்தியோகத்தர்களை காயப்படுத்தியுள்ளது. அரசாங்க உத்தியோகத்தர்கள் இந்த வரவு செலவு திட்டத்தினை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கோவிட்டினால் பாதிக்கப்பட்ட சமூகத்தினை கட்டியெழுப்பும் திட்டங்களும் இந்த வரவு செலவு திட்டத்தில் இல்லை. பலதரப்பட்ட பாதிப்புகள் இந்த வரவு செலவு திட்டத்தில் உள்ளன. வரவு செலவு திட்டத்தின் ஊடாக 65வீதத்திற்கு மேற்பட்ட நன்மைகள் மக்களுக்கு கிடைக்க வேண்டும். பாதுகாப்புக்கு பல்லாயிரக்கணக்கான கோடியை ஒதுக்கீடு செய்துவிட்டு, வறுமை நிலையில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்பட்டது என்பது வன்மையாக கண்டிக்கக்கூடிய செயற்பாடாகும். இந்த வரவு செலவு திட்டத்தின் மீதான விமர்சனங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதனை அரசாங்கம் மீள்பரிசீனை செய்ய வேண்டும் என மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### இரண்டரை வருடங்களுக்கு வீழ்த்த முடியாது

வீதிகளில் எத்தனை ஆர்ப்பாட்டங்களைச் செய்தாலும் , தீர்மானங்களை எடுப்பது நாடாளுமன்றம் என்றால் நாடாளுமன்றில் அது தொடர்பில் பேசுங்கள். இந்த அரசாங்கத்தை இரண்டரை வருடங்களுக்கு வீழ்த்த முடியாது.


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்திற்கு அடுத்த வாரத்தோடு 2 வருடங்கள் நிறைவடைகின்றது. இன்னும் ஒன்றரை வருடங்கள் வரை அவர்களே கொண்டுவந்த அரசியலமைப்பின் படி அரசாங்கத்தை எப்படியும் கலைக்க முடியாது.

கடந்த காலங்களில் ஒரு வருடத்தில் அரசாங்கத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு முடியும். அந்த முறையை நல்லாட்சி அரசாங்கம் 5 வருடங்களாகியது. பின்னர் எமது அரசாங்கத்தில் அதனை இரண்டரை வருடங்களாக மாற்றியமைத்தோம்.

அப்படியென்றால் அரசாங்கத்தை வீழ்த்த முடியாவிட்டால் ஏன் வீதிக்கு இறங்கி கொரோனாவை பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இந்த ஆர்ப்பாட்டங்கள் இறுதி பிரதிபலன் என்ன? இந்த ஆர்ப்பாட்டங்கள் இறுதி பிரதிபலன் தான் கொரோனா 4ஆவது அலையை உருவாக்குவது. வேறு எந்த காரணமும் இல்லை என தெரிவித்துள்ளார்.

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க

Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news

www.supeedsam.com